உதயதாரகை.—MORNING STAR.

Published on the 1st and 3d Thursday of every Month at one shilling a Quarter payable in advance.

உ. புஸ். சஞ்சிகை. உ௰.] ௲அ௱௪௰உ ௵. ஐப்பசி. உ௰, தேயதி வியாழக்கிழமை, Thursday, October 20, 1842. [Vol. II. No. 20.

பாண்டிவள நாட்டுச் சரித்திரக் குறிப்பு.

Historical sketch of the Pandian Kingdom.

(Continued from page 229.)

திருமலை நாயகனுடைய துரைத்தனமானது வெகு காலம் நடந்தது. ஒரு சாதனத்திலே (௪௰) வருடமென்றும், மற்றொன்றில், (௫௬) வருடமென்றுஞ் சொல்லியிருக்கின்றது. ஆகையினாலே நாம் குறைந்த பட்சங்கணக்குப் பார்த்தாலும், (௲௬௱௫௯) வருடம் வரைக்கும் அவன் துரைத்தனம்பண்ணினதாகக் காண்கின்றது. இந்த வேளையிலே இவன் குமாரனாகிய வீரப்பனென்கிறவன் இவன் பட்டத்துக்கானான். இவன் எப்பேர்க்கொத்தவனென்றால், மிகவும் பலவீனமுள்ளவனும் சோம்பற்குணமுடையவனுமாயிருந்தான். ஆனபடியினாலே, காந்திதேவநரநாராயணனென்கிற வெகு சுறுசுறுப்புள்ள இராசா இவனுடைய விசாரணைக்குட்பட்டுவந்த மைசூர் தேயத்தவர்களை வரவொட்டாமற் பண்ணிக்கொள்ளுகிறதற்குச் சக்தியில்லாமற்போயிற்று. இப்படித் துரைத்தனம்பண்ணிக்கொண்டிருந்த காலத்தில் மேற்படி மைசூர், மதுரை நாயகனிடத்திலே மேற்கேயிருந்ததாலுக்காக்களிலே (Talook) அநேக இடங்களைக் கைக்கொண்டார்கள்.

சொக்கநாத நாயக்கன் தன் தகப்பனுடைய பட்டத்துக்கு வந்தான். இவன் கொஞ்ச நிர்வாகமுள்ளவனாயும், யுத்தம்பண்ணப் பட்டவனாயும் இருந்தபடியினாலே இவனுக்கு அண்டை சலிவிருக்கப்பட்ட இராசாக்கள் எல்லாம் இவனென்றுலெல்லாருமஞ்சத்தக்கவனாகப் பண்ணுவித்துக்கொண்டான். இவன் முதல் தஞ்சாவூர் (Tanjore) இராசாவாகிய விசயராகவ நாயகன் பேரிலே தண்டெடுத்து அவனைத் தோற்கடித்து அவனைக் கொன்றும், அவனுக்கு மித்திரனாகிய சூரியதேவனென்கிற சேதுபதியைப் பிடித்துக்கொண்டு மேற்படி சேதுபதிக்குப் பங்காளியாகிய கிழவனென்கிறவனை இராமநாதத்துக்குச் சமானனாக்கியும் வைத்தான். அப்புறம் மைசூர் இராசியத்தைத் தன் அதிகாரத்துள்ளாக்கிக்கொள்ளவேண்டுமென்கிறதாய் எத்தனப்பட்டு அதின் பேரில்த் தண்டெடுத்தான். அந்த யுத்த காரியங்களினாலே தன்னெண்ணங்கள் மாறிப்போய் மதுரைத் துரைத்தனத்திலே அநேக நஷ்டத்துக்கிடமாய்விட்டது.

தஞ்சாவூரிலே இறந்துபோன ராசாவின் குமாரனாகிய செங்கமலத்தாசு என்றவன் தன் காவற்பட்டிருந்த திரிச்சிராப்பள்ளிக்கோட்டையிலேயிருந்து தப்பி ஓடிப்போனான். இவன் தப்பித்துக்கொண்டதில் துலுக்கு அதிகாரியாகிய ருஸ்துமுகான் சகாயத்தினாலே நேரிட்டதாகக் காண்கின்றது. அந்த ருஸ்துமுகான் என்றவன் சொக்கநாத நாயகனுக்கு இஷ்டமாயிருந்தது. அவன் சகோதரனாகிய முதளருத்திரப்ப நாயகனுடைய கட்டளைப்படிக்கு அந்தத் திரிச்சிராப்பள்ளித் தாணயத்துக்குச் சேனாபதியாயிருந்தான். முதளருத்திரப்ப நாயகன் ஊதாரியுஞ் சோம்பேறியுமாயிருந்து தன் கைக்குக் கீழிருந்த ராணுவங்களுடைய சம்பளத்துக்காக நிசமித்துக் கைப்பணத்தைத் தன் சொந்த உல்லாசங்களிலே செலவழித்துப்போட்டான். அதனாலே அந்த ராணுவங்களுக்கு வெறுப்பு வந்திருந்த சமயம் பார்த்து அந்த ருஸ்துமுகான் அவர்களுடைய அதிகாரத்தினின்று தன்னீங்கலாய்த் திரிச்சிராப்பள்ளிக்குத்தானே துரையாய்விட்டான். இந்தக் காரியத்தினாலே செங்கமலத்தாசு தப்பியோடிப்போனான். கெஞ்சிராசாவுக்குச் சீரங்கமட்டும் (Serangam) வரும்படியாய்த்தைரியமுண்டாயிற்று. அப்போது மைசூர இராசா அந்தப் பிராந்தியத்திலே சண்டை தொடுக்கலாயிற்று. இப்படியிருக்கிற சமையத்தில், சொக்கநாதன் தன்னுடைய பூர்வ அதிகாரத்தின் குறியைக் காப்பாற்றிக்கொள்வதற்குப் பிரையாசியாயிருந்தது. அவனுக்கு விரோதிகள் வெகு காலமாய் அதிகாரம் பாராட்டிக்கொண்டிருந்தார்கள். மைசூரார் மதுரைப் பட்டினத்தை முதலாய் (௫) வருடஞ் சுவாதீனம்பண்ணிக்கொண்டிருந்ததாகவும், மேற்படி மைசூரார் தங்கள் ஊருக்குப் போய்விடும்படியாய் ஈரோடுதாராபுரமென்கிற தாலுக்காக்களையும் மைசூரோடே சேர்த்துக் கொடுக்கிறேனென்று அந்தச் சொக்கநாத நாயக்கன் சொன்னான். இந்தப் பிரகாரஞ் சொக்கநாத நாயக்கள் தனக்கு மிகவும் வலிமையுள்ள விரோதிகளில் ஒருவனை நிவாரணம்பண்ணிக்கொண்டு கிழவன் சேதுபதியினுடைய பலமான கும்மக்கினாலே பின்பு செங்கமலத்தாசு என்கிறவனுடைய தண்டுகளை எல்லாந் துரத்திவிட்டு மறுபடியும் தஞ்சாவூரைத் தன் சுவாதீனம்பண்ணிக்கொண்டான். கடைசியிலே ருஸ்துமுகானிடத்திலிருந்து திருச்சிராப்பள்ளியையும் சுவாதீனம்பண்ணிக்கொண்டான். அந்த ருஸ்துமுகானும் சண்டையிலிறந்து போய்விட்டான். பிறகு செஞ்சிதிராசாவும் தன்னிராச்சியத்துக்குப் போய்விட, சொக்கநாதன் தன்னுடைய பிரார்ச்சிதமான தெயங்களிலே சொஸ்தமாயிருந்தான். முன்னோடிப்போன செங்கமலத்தாசு என்கிறவனுக்கு மராட்ட அதிகாரியாகிய எகோஸ என்கிறவனுடைய சகாயங் கிடைத்தபடியினாலே சொக்கநாதநாயகன் தான் சம்பாதித்த தஞ்சாவூரை உடனே இழந்துபோனான். விசயப்பூரில் இருக்கிற துலுக்காணர்களுடைய அரசாட்சிக்குட்பட்ட பெங்கபூரிலே துணிவுகொண்டு வந்து அதிகாரம் பண்ணிக்கொண்டிருந்தவன் அவனை உடனே ஆதரித்தான். இந்த மித்திரர்கள் தஞ்சாவூருக்கு வந்து உடனே மதுரைத் தேசத்தினுடைய தண்டுகளைத் துரத்திவிட்டார்கள். உடனே தஞ்சாவூர் அதிகாரத்தை மேற்படி மராட்டியன் கைக்கொண்டு சொக்கநாதனுக்கு விரோதமாய்ச் செய்யத்தக்க காரியங்களைச் சோர்வில்லாமற் செய்தான். இந்த இராசாக்களுடனேதானே ஒன்றாய்க்கூடிக்கொண்டு சிவாசியென்கிறவனை வரவொட்டாமல்த் தடுத்தார்கள். இது காரியங்களெல்லாம் நடந்தன. (௲௬௱௭௫)ம் வருடத்துக்கும் (௲௬௱௮௰) வருடத்துக்கும் இடையிலே போல வழக்கமாய்ச் சொல்லிக்கொள்ளப்பட்டது. நாங்கள் எழுதிக்கொண்டு வரப்பட்ட சாதனங்களிற் கண்டபடிக்குச் சொக்கநாத நாயகனுடைய அதிகார காலத்துக்கு இது சரிப்பட்டிருக்கிறதாகவும், மேற்படி சொக்கநாதனுடைய அதிகாரமானது (௲௬௱௮௫) வருடத்திலேயோ (௲௬௱௮௯)ம் வருடத்திலேயோ முடிந்துபோனதாகவுங் காணப்படுகின்றது. (இன்னும் வரும்)

Life of Mohammed.—மகமதுவின் சரித்திரம்.

Reflections upon the extraordinary career of Mohammed—Description of his person.

மேலைச் சஞ்சிகைளிற் பிரசுரஞ் செய்த மகமதுவின் சரித்திரத்தைப் பற்றிய சில பிரதான கவனிப்புகள்.

உலகத்தில் எப்போவாகுதல் சீவித்தவர்களுக்குள்ளே நினைத்த காரியமனைத்திலும் அனுகூலத்தினால் முடிதரிக்கப்பட்ட எத்தனாகிய மகமதுநபியினுடைய போக்குவாக்கு நடையும் இம்மட்டோடே முடிந்தன. பெருமைச் சிந்தை அகங்கார முதலிய துற்குணங்கள் இவரில் உண்டுபட்டதினால் அரபியருக்குள்ளே வரவரக் கனத்திலும் பணத்திலுங் கதித்துச் சாகமுன்னமே ஒரு பெரிய மாறுதலை யாரம்பித்து ஒரு பெரிய இராச்சியத்தையும் ஸ்தாப்பித்து, றோமை இராச்சியத்தார் (௮௱) வருடக் காலத்துக்குள்ளே வெற்றிகொண்ட பட்டினங்களனைத்திலும் மகமதுநபி அதிகங் குறைந்த (௮௰) வருடக்காலத்துக்குள்ளே தான் கைப்பற்றின பட்டினங்கள் மிகுதியாய் இருந்தன. ஆனாலும் இவர் நடத்திப் பரப்பி வந்த மதாசார ஒழுங்கையும் நடையையும் பார்க்கும்பொழுது அதிகம் விம்மிதங்கொள்ளவேண்டியிருக்கின்றன. ஏனென்றால் இவரொரு அற்பன் ஆளாயிருக்கக்கொள்ள இவர் ஆரம்பித்தியற்றி வந்த மேலான காரியங்களைப் பார்க்கும்பொழுது ஆண்டவன்தானே இதைச் செய்து நடத்திவந்தாரென்று நாங்கள் தீர்க்கவேண்டியது.

மகமது நபியைப் பற்றிய சீவிய சரித்திரத்தின்படி அவரொரு நடுராசியான ஆளாயிருந்தாரென்றும், சடலமடங்கலுமேகபோகத்துக்குச் செம்மையடர்ந்திருந்ததென்றும், தலை மிகப் பெரிதாயிருந்தாலும் அழகுள்ளதென்றும், உரோமங்கள் அனைத்தும் மெத்த அழுத்தமுங் கருமையுமுள்ளதென்றும், அப்படியே கண்ணா

ங்கருமையுள்ளதென்றும், இன்னும் அவர் சாகிற தறுவாயிலே அவர் வயதுசென்றவராய்ச் செத்தாரென்றொருவருஞ் சொல்லக்கூடாத அவ்வளவு அவருடைய சரீரம் மிகவும் உரத்துத் தடித்ததாயிருந்ததென்றும், கதுப்புகள் மெத்த அகன்றதும் நெற்றி தடித்ததுமாயிருந்ததென்றும், நிமைகள் நீண்டதும் அழுத்தமுள்ளதுமாயிருந்ததென்றும், இவைகட்கிடை ஒருநரம்பிருந்ததினால் அவரெப்போவாகுதல் முனிவுகொள்ளும்பொழுது அவருடைய கைநாடி நரம்பு எப்போதுமியல்பாயடிக்கிறதைப் பார்க்கிலும் மெத்தச் சுறுக்காய்ப் படபடென்றடிக்குமென்றும், மூக்குச் சற்றே நீண்டு வாயகன்று நீக்கற் பற்களுமாயிருந்தனவென்றும், நீக்கலாயிருந்தாலுமெல்லாம் ஒழுங்காய்முளைத்திருந்தனவென்றுங் காணப்படுகின்றது. அவரெப்போவாகுதல் சிரிக்கும்பொழுது அவருடைய பற்களெல்லாம் முத்துமாலை கோத்ததுபோற் காணப்பட்டன. இன்னும் அவர் வரவரப் பிற்காலங்களிலே மெத்தப் பூதித்தவரானார். அவரெப்பொழுதுந் தன் சரீர சௌக்கியாரோக்கியத்துக்காக வெளியில் வெளிக்கிட்டுலாத்தி மெத்த ஆசாரமுள்ளவராயுமிருந்தார். மகமதுநபி மெத்தப் புத்திவானென்றும், பத்திவானென்றும் நீதியுள்ளவரென்றும், தயாளகுணமுள்ளவரென்றும், பதமையுள்ளவரென்றும், அவரைப் பின்பற்றி அவருக்குத் தொழும்பு செய்துவந்தவர்கள் அவரைப் பற்றி அளவுக்கு மிஞ்சிப் புகழ்ந்துகொள்ளுகிறார்கள். அவருடைய தருமக் குணத்தைப் பார்த்தால் அவர் தமது சமாசாரத்துக்குப் போதுமான பணம் வீட்டில் வைத்துச் செலவழித்து மிச்சமானவைகளை ஆதுலர்க்களிப்பதுமாத்திரமல்ல தான் சாப்பிடுஞ் சாப்பாட்டில் ஒரு பங்கையும் வறியவர்களுக்கென்றே கொடுத்துவிடுவாராம். இதெல்லாம் ஒருவேளை உண்மையாயிருக்கக்கூடும். ஆனாலும் இவையெல்லாவற்றையும் ஏதாவொரு குறித்த நோக்கத்துக்காகச் செய்து வரவுங் கூடும். ஆகையினாலே பட்சமாகவுந் தயவாகவுஞ் செய்கிற செய்கைக்கும் தந்நயம்பற்றி மனமொன்று வாக்கொன்றாய்ச் செய்கிற செய்கைக்குமுள்ள வித்தியாசத்தை அறிந்துகொள்வது மெத்தத் தெண்டிப்பாயிருக்கின்றது. அல்லாமலும் ஒரு தத்துவ பராக்கிரமசாவி ஒவ்வொரு காரியங்களையும் ஒன்றோடொன்றிசையப்பண்ணிக்கொள்ளவுங் கூடும். பெருமைச் சிந்தை சிலவேளைகளிற் பணவாசையை யடக்கிப்போடுகின்றது. நேசம் அல்லது அன்பு இவ்விரண்டையும் அடக்கி ஆளுகின்றது. ஒரு மனிதன் நீதியுள்ளவனாயுந் தயாளகுணமுள்ளவனாயுமிருந்து ஒரு பரிசுத்தவானுடைய செய்கையைப் போற் செய்யவுங்கூடும். இப்படியெல்லாஞ் செய்வது தானொரு தீர்க்கதரிசிக்குரித்தான இலட்சணங்களையும் ஒரு இராசனுக்குரித்தான தத்துவத்தையுமடைந்துகொள்ளுகிற நோக்கமேயல்லாமல் மற்றும்படியல்ல. ஆனாலும் மகமது நபியினுடைய எண்ணங்களுங், குணங்களுங், குறிகளுஞ், செய்கைகளும் போதியபடி மேலானவைகளாயிருந்தனவென்று நாங்கள் நினைக்கவில்லை. இன்னும் இந்த எத்தனாகிய மகமதுவைப் பற்றி எழுதின கிறிஸ்தவர்கள் அவரைப் பற்றி வீண்மோசமாய் இல்லாக் காரியங்களை உண்டென்று ரூபித்தெழுதினார்களென்று நாங்கள் கொஞ்சமென்கிலும் எண்ணங்கொள்ளுகிறதில்லை. இஸ்லாமதத்தையும் அத்தை எடுத்துத் தொடுத்துக் கட்டின மகமதுவின் சரித்திர உண்மைகளையும் நாம் பார்க்கும்பொழுது இவர் முன்னே சற்றே புகழப்படத்தகும் புண்ணிய இலட்சணங்களையுடையவராயிருந்தும, இவருக்கு வயதுபோகப்போக அவ்விலட்சணங்களெல்லாம் அவரைவிட்டகன்று அப்பாற் பாய்ந்தோடி ஒழித்து மறைந்து புகுந்துவிட்டன. ஏனென்றால், அவர் தத்துவ பராக்கிரமத்தில் எவ்வளவுதிரப்பட்டாரோ அவ்வளவுக்கதிகமாக அவருடைய நன்மார்க்கமுதலிய சன்மார்க்க நடைகளும் வரவரக் குன்றிப்போயின.

ABRIDGEMENT OF GOOD'S BOOK OF NATURE.

கூட்டென்பவர்செய்த பிரபஞ்சநூல்.

௨ம். பிரிவு ௩ம். அதிகாரம்.

(சிற்றறிவு, புலனுகர்ச்சி, பேரறிவு.)

க. சிற்றறிவாவது சீவாங்கபடைப்புக்கப்பொழுது அல்லது பின்னாலாகவேண்டிய பயனுக்கியற்றப்பட்ட சில சுபாவதத்துவங்களின் சேட்டையினாலாகுமதின் தொழிலாமென்றும், பேரறிவாவது மனமுள்ளசீவனுக் கம்முகாந்திரத்துக்காக ஏற்படுத்தப்பட்டதாய்க் கற்றறிந்த தத்துவங்களின் சேட்டையினாலுண்டாகுமதின்தொழிலாமென்றும் மேலைச்சஞ்சிகைகளிலொன்றிற் காட்டினோம்.

௨. சிற்றறிவும், புலனுகர்ச்சியும், பேரறிவும் விசேடித்தபிரகாரமாய் ஒன்றுக்கொன்று விகற்பமுள்ளவைகளாயிருக்கின்றன. இவை மனிதரிற் காணும் பிரகாரமாயொருமிக்கக் கூடியிருப்பதுமுண்டு. சிற்றறிவும், புலனுகர்ச்சியும் அநேகமிருகங்களிற் காணப்படுகிறதுபோல வொற்றுமைப்பட்டிருப்பதுமுண்டு. அல்லது தாபரங்களிலுள்ள பிறகாரமாய்த் தனிச்சிற்றறிவு சீவியத்துக்கவசியமான சகலதொழில்களையுமியற்றுவதுமுண்டு.

௩. திண்மைக்கவர்ச்சி சீவாங்கமற்றபதார்த்தத்தின் சாதாரணபிரமாணமாயிருப்பது போலச் சிற்றறிவு சீவாங்கபதார்த்தத்துக்கெல்லாம் பொதுப்பிரமாணமாயிருக்கின்றது. ஆனாலும் புலனுகர்ச்சியும், பேரறிவும், நரம்பு, மூளைமுதலிய கருவிகளில்லாமலிருக்கக் காணப்படுகிறதில்லை. சிலவேளையில் றோசைப்புட்பம், நிசாக்கிதக்குருவிகள் அன்பு கொள்ளுகின்றனவென்று சிலர் சொல்லிக்கொள்வதுண்டு. ஆனால், இது மதியீனமானவெண்ணம். ஏனென்றால், ஒரு பனிக்கட்டியைப்போலத்தானே றோசைப்புட்பமுமுணர்த்தியற்றதாயிருக்கின்றது.

௪. தாபரங்களுக்கு அன்பும் ஒத்தவெண்ணமும், உணர்ச்சியுமிருக்கின்றனவென்று சொல்லுங் கோட்பாடுமுழுதும் விருதாக்காரியமாயிருக்கின்றது. ஆகையால் பேரறிவுண்டென்று சொல்லுகிறவனெவனும் அத்தை ஒழித்துவிடவேண்டியது. தாபரங்களுக்கு யாதொருவிதமான உணர்ச்சியல்லது புலனறிவுண்டென்பதற்குத் திட்டாந்தமாக யாதொன்றையுங் காணோம். அவைகள் தனிச்சிற்றறிவின் பிரமாணத்தினால்மாத்திரம் இயக்கப்பட்டாண்டுகொள்ளப்படுகின்றன. இப்பிரமாணங்களும் அவைகளைக் காத்துக்கொள்ளுகிறதற்கும் பூரணப்படுத்திக் கொள்ளுகிறதற்கும் அவைகள் போதுமானவைகளாயிருக்கின்றன.

௫. அப்படியிருந்தும், தனிச்சிற்றறிவு அதிசயிக்கப்படத்தக்கவிதமாய் உதாரணப்பட்டிருப்பதைத் தாபரங்களுக்குட் பலமுறையுங் காணப்படுகிறது மெய்தான். கொன்வுல்வுலஸ் அல்லது ஓர்வகை அவரைக்கொடியிடப்புறமாயல்லது கீழ்ப்புறமாய் நின்று தென்பக்கமாய்வந்து மேற்றிசையிற்படர்ந்து சுருண்டுகொள்ளும். ஆனிசக்கிள், கொப்என்றசெடிகள் இவற்றிற்குமுழுதிமெதிர்த்திசையை நோக்கிப்படருகின்றன. இவ்வகைவிகற்பங்களின் காரணங்களை ஆர் விளங்கப்பண்ணுவான்?

௬. விலங்கினங்களில்த் தனித்தனிச்சிற்றறிவு இவ்விதமான விகற்பமுள்ளதாயிருக்கின்றதாகக் காண்கிறோம். அதின்காரணமின்னதென வெளிப்படுத்த எங்களாற் கூடும். எப்படியெனில், அணில் வெள்ளெலி என்ற இவ்விரண்டும், கசில் என்ற கொட்டையில் மெத்தப்பிரியமாயிருக்கின்றன. ஆனாலிவ்விரண்டிலொவ்வொன்றும் அந்தக் கொட்டையை வெவ்வேறுவிதமாய்த் துளைத்துப் பிழக்கின்றது. அணிலானது அந்தக்கொட்டையின் சிறுத்த நுனியைக் காந்தினபிறகு ஒரு பையன் தன் கத்தியினால் அதைப் பிழப்பதுபோலத் தனதுமுன் வாய்ப்பல்லினால் அந்தக் கொட்டையினோட்டை இரண்டாய்ப் பிளக்கின்றது. ஆனால் வெள்ளெலியோ தனது பற்களாற் கொட்டையிலோர்துவாரமிட்டு அதன் வழியாய் உட்பருப்பை யிழுத்தெடுத்துப்போடுகின்றது. இந்த அற்பமிருகங்கள் கொண்டியற்றுங் கருவிகளாகிய பற்கள் ஒன்றுக்கொன்று வித்தியாசமாயிருக்கிறபடியால இவைகட்குள்ள சிற்றறிவும் ஒன்றுக்கொன்று வித்தியாசமாயியற்றப்படுகின்றது. மிருகங்களினியல்பை நாமறிந்திருப்பதுபோலத் தாபரங்களினியல்பையும் அறிவோமேயானால் ஒருவேளை அவரை இனத்தைச் சார்ந்தகொடிகளேன் ஓர்பக்கத்துக்குத் திரும்பிப்படருகுதென்றும், கப்என்றசெடி அதற்கெதிர்ப்பக்கமாயேன் திரும்பிப்படருகுதென்றும், நாம் சொல்லக்கூடும்.

௭. கீழ்வகையைச்சார்ந்த முச்சடச்சிவிப்புழுக்கள் முதலியன உணர்ச்சி நரம்பாகுதல் மூளையாகுதலுள்ளனவல்ல. இவைகளுந் தாபரங்களைப்போல, புலனுகர்ச்சி அறிவென்பவைகள் சற்றென்கிலுமில்லனவாயிருக்கின்றனவென்று நம்புகிறதற்குப் போதிய அத்தாட்சியுண்டு ஆனால் ஒரு மிருகத்துக்கு நரம்பிருக்கிறதை நாம் கண்டவுடனே அதற்குப் புலனுகர்ச்சியுமுண்டென்று நிச்சயமாய்க் குறிக்கலாம. அதற்கு மூளையிருந்தால் அதற்கு உணர்ச்சி அதிகம் விகற்பப்பட்டிருக்கும். இதைச் சிற்றறிவுடனிணைத்துப்பார்க்குமிடத்து அந்த விலங்கினியல்புக்குத்தகுந்த அளவாய்ப் பேரறிவுஞ்

காணப்படுகின்றது. மனிதனில்மாத்திரமே இப்பேரறிவு அவனுடைய நன்மை தீமைக்குரித்தான அறிவுக்கருவிகளுடனொற்றுமைப்பட்டிருக்கின்றது.

அ. சகலவிலங்கினங்களும் தங்கடங்களுணவை என்னவிதமாய்த் தின்கிறதாயிருந்தாலும் முதலிலே இச்சிற்றறிவினாற்றானே ஏவிவிடப்படுகின்றன. ஆட்டுக்குட்டி பால்குடிக்கின்றது. கோழிக்குஞ்சு பொறுக்கித்தின்கின்றது. குருவிக்குஞ்சு தன்வாயைத் திறக்கின்றது. இந்த வழமையான விலங்கினங்கள் முதலிலே தங்கள் தாயையும் அறியாதவைகளாயிருக்கின்றன. அவைகளுடைய தாய்மாரை மாற்றிவிட்டாலுந் தங்கள் சொந்தத் தாயைப்போலே எடுத்துமாற்றிவிட்ட தாயையும் பாவித்துக்கொள்ளும். ஆனால் அப்படி ஒரு கிழமை அல்லது இரண்டுகிழமைக்குப்பின் மாற்றத்துணிந்தால் அது சரிப்பட்டுவராது. ஏனென்றால், இவ்வளவுநாளைக்குள்ளே அவைகள் தங்களுருபில் வளர்ச்சியடைகிறது போல உணர்ச்சி அறிவுமவைகளிற்றோற்றிக்கொள்ளுகின்றது. இவ்விதமாயதிகப்படுமுணர்ச்சியறிவு முதிர்ந்த சிற்றறிவுடனொன்றித்துக்கொள்ளுகின்றது. இவ்விதமாகவே, சொந்தக்கைத்தாயும் பிள்ளையும் பிரிந்தகாலத்திலே சோர்வுகொள்ளுவார்கள்.

(இன்னும் வரும்.)

(The following article is the original of the foregoing)

ABRIDGEMENT OF GOOD'S BOOK OF NATURE.

CHAP. V.] *Instinct, Sensation, & Intelligence.* [PART II.

1. In the last chapter we observed that instinct is the operation of the principle of organized life by the exercise of certain natural powers directed to the present or future good of the individual; while reason is the operation of the principle of intellectual life by the exercise of certain acquired powers, directed to the same end.

2. Instinct, feeling, and intelligence are all principles essentially different; they may all exist together, as in man; or instinct and feeling may be united as in most animals; or pure instinct, as in plants, may perform all the functions necessary to life.

3. Instinct is the common law of organized matter, as gravitation is of unorganized; but feeling and intelligence never appear to exist without appropriate organs, that is, the nerves and brain. We hear, sometimes, allusions to the loves of the rose and the nightingale; but it is a silly conceit—the rose has no more feeling than an icicle.

4. The whole theory of the loves, sympathy, and sensibility of plants is a very absurd affair, and ought to be entirely discarded by every one professing to have reason. There is not the least evidence that vegetables have feeling or perception of any kind. They are guided and governed by the laws of simple instinct only, which are sufficient for their preservation and perfection.

5. It is true, there are often in the vegetable kingdom examples of simple instinct, which seem marvellous. The stalk of the convolvulus or the kidney bean always *twines* from the left or east by the south to the west; while the honeysuckle and the hop take a perfectly reverse direction. Who can explain the cause of these differences?

6. We see instances of like differences in the simple instinct of animals, which we can explain. The squirrel and the field-mouse both like hazle-nuts; but each little animal opens his nut in a way of his own. The squirrel, after rasping off the small end, splits the shell in two with his long fore-teeth, as a boy does with his knife; the mouse *nibbles* a hole with his teeth and draws the kernel through it. The instinct of these animals acts differently, because their instruments of action, their teeth, are not alike. If we knew the nature of plants as well as we do that of animals, perhaps we might tell the reason why the bean turns one way, and the hop the other way.

7. The lowest class of animals, such as the zoophytic worms, polype, and some others, have neither nerves nor brain, and we have the strongest reason for believing that they are as destitute of feeling and perception as plants. But as soon as we find an animal has nerves, we may be certain it has feeling: when there is a brain, the feelings are more varied, and, united with instinct, a degree of intelligence, proportioned to the nature of the animal, appears. In man alone, this intelligence is united with the moral and reasoning faculties.

8. Young animals of all kinds, in whatever way they take their food, are at first stimulated by instinct alone. The lamb sucks, the chicken picks, and the young bird gapes. These young animals do not at first know their mother, and if they are interchanged then, they are as satisfied with the foster-parent as the natural one. But let the same interchange be attempted a week or fortnight afterwards, and it will not succeed. There has been a birth of feeling, as well as a growth of form, in the mean time; this growing feeling has united with the already mature instinct and the natural nurse and nursling will pine equally, if separated. [To be continued.]

கடிதங்கள்.

Hinduism Unmasked.

(Continued from page 217.)

THE NON-EXISTENCE OF MOUNT MERU.

Skanda Purana—Andakosa Section.

"Mount Meru which is situated in the centre of *Jambhu*, is in form like the fruit of the lotus. Its height is 84,000 yojanas;* its depth in the earth 16,000; its breadth at the summit 32,000; and the base 16,000. It has 3 swelling cones (rising successively above) on the highest of which there are many peaks In midst of the Mt. Meru is *Manovathy*, the city of *Bramah*; to the west of this is *Vicundum*, where *Hari* or *Vishnu* dwells; on the north-east is *Asovathy*, the abode of *Paramaswara* (Siva.) At the eight points N. E. S. W. etc. are the cities where Indren and the rest of the celestial regents reside."

Mt. Meru and its appendages seem to be the ponderous subject of a great many Puranas. It is said that two liars once agreed to tell each a lie, and see which of them could excel the other. One of them said that he drove a nail into the moon and rivited it. The other said that he went and pulled it out from the other side when it was thus rivited. If these liars had lived in the days of the authors of the Mt. Meru legend, it would seem probable from their most profound skill of inventing falsehoods, that these liars would gladly wish to be schooled by them The two lies before referred to bear no comparison with that of Mt. Meru I hope in the following remarks to make this appear

The mountain is said to be in the unnatural position of standing upon its vertex, and instead of being composed of

* A yojana is equal to 182 miles according to the table.

the usual substance, it is represented to be of pure gold. Its magnitude is 1,527,250 miles in height. This compared with the real magnitude of the earth, makes it 190 times larger than its diameter. The position of such a mountain then on the earth would be similar to that of a tall palmyra tree, standing upon a palmyra fruit. But the Mount being represented to be in the form of an inverted cone, whose breadth at the summit is 581,818 miles, the flattened edge at the top will overshadow the earth and extend all round to the distance of 286.909 miles beyond the circumscribing limit of the terrestrial sphere This would be similar to a large umbrella, shadowing a mustard seed (the umbrella representing the mountain and the mustard seed the earth.) Again the diameter at the base being 290,909 miles, and its depth of a like dimension, the magnitude of the earth is by far too small for the location of such an enormous mountain.

No Hindu is perhaps able to reconcile the position of Ceylon as an Island, with the Puranic description of the seven islands and seas* Is it within or without the *Jambhu Dwipa*? For arguments' sake we will suppose it to be in the middle of the *Jambhu Dwipa*. Then according to the Puranic description, the earth being flat, and Ceylon being at the distance of 50,000 yojanas south of Mt. Meru, and the mountain being 84,000 yojana's height, it should (by the principles of Trigonometry) appear to us under an angle of about 60°. Let us now take the most liberal supposition of the case, and take it for granted that Ceylon is situated at the farthest extremity of the *Jambhu Dwipa*, that is at the distance of 100,000 yojanas; then Mt. Meru must appear to us under an angle of 40°. Now is this a fact? Do we see such a mountain on the north? This argument is satisfactory and conclusive to any Hindu that understands the rudiments of Trigonometry, though ignorant of European literature and science I do not wish to notice in this place the appendages of *Mt Meru*, because the existence of Mt. Meru itself is satisfactorily refuted, and my heathen friends, I think, would not care for the appendages, if the Mount is struck off in the spirit of the proverb "*If the Brahmin is lost, what is his lock of hair worth?*"

The celebrated Mt. Meru then is a creature of mere imagination existing only in the whimsical notions that floated in the brain of the poet, when labouring under a mental delirium; the shadow of a wakeful dream—an ideal creation, and notwithstanding its magnitude of yojanas, it produces less sensation, than vacuum and weighs less than an immaterial atom.

Finally, my dear Hindu friends, shall we in the light of this subject call Skanda Purana a piece of God's revelation, or receive Hinduism which sets forth Mt. Meru, as a religion given by God for the salvation of mankind? What shall we say of our ancient doctors? How base, dishonest, and hollow-hearted they must have been to palm such falsehood upon us their posterity! How fiendish is it when we consider that all things on it form a part of the all-important subject where the salvation or the loss of souls is at stake. Shall we shrink back from beholding TRUTH when it breaks upon us with its smiling, vivifying rays? Why should we love the darkness and prefer to be covered by it rather than to come into the light? Blessed be the name of God who has sent his heralds of truth to our benighted country and may that BOOK which is the book of books, the BIBLE—be a light unto our path and a lamp unto our feet during our pilgrimage in this valley of ignorance and sin, and may that Saviour which it sets forth be manifested to our souls with all his glories to redeem us to be partakers of the grace and immortality which he brought to light.

Batticotta Seminary 8th Oct. 1842. ROBERT ADAIR.

* Vide "Morning Star" No. 15. page 216.

(A question on Medicine.)

றீ, றீ மைனத் துரையவர்களுக்கு வந்தனம்.

வைத்தியத்திலோர் வினா வினாவுகின்றேன். என்னவெனில், மிகத்தெளிவெய்தியதவத்தருளுத்தம அகஸ்தியமுனியருள் வைத்தியமறுநூற்றில் "கொள்ளடா தசநாடி தன்னின் மூன்று கூறுவேனிடைசுழுனை பிங்கலை தானென்றும்- விள்ளடா விடை கலைதானிரண்டுமாறிமிகுந்தகாலங் குட்டத்திருந்தேயேறிக்- கள்ளடா கண்டத்தின் மாறியோடிக் கபாலவரைதனின்முட்டி மார்பிற்பாய்ந்து- தள்ளடாவலதுகரம்பிங்கலைதானோடுந் தனித்தவிடையிடதுகரஞ் சாருந்தானே"-எனவும், "சாருமெடாசுழுமுனைதானடுமையத்திற்றுதவிரன்மூன்றுமேலதாக்கிப்பாரு-பேருமெடாவிடையதுதான் வாதமாச்சுப்பிங்கலைதான் பித்தமெடாபேணிப்பாரு-சேருமெடாசுழுமுனைதானையதாச்சுச் செப்புகிறேன் றசவாய்வின்மூன்றுவாயு-ஆருமெடாவாதபித்தசேஷமத்திலோடு மொன்றாகச் சேர்ந்திருக்கவுரைக்கிறேனே"-எனவுமிருக்கின்றன. இவைகளில் வாதபித்தங்கள் இருகாலங் குட்டங்களிருந்துண்டாய்க் கண்டத்தில்வந்து மாறியோடிச்சிரசின்முட்டி மார்பிலேபாய்ந்து வலதுகையிற் பித்தநாடியும் இடதுகையில் வாதநாடியும் போகுதென்றும், சேட்டுமநாடி நடுவிற்போகுதென்றுஞ்சொல்லியிருக்க ஆயிரத்தஞ்ஞூற்றில் "நாமப்பா கண்டுசொன்னோ நரம்பொன்றிலோடி மூன்றே" எனச்சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் வாதபித்தசேட்டுமங்கள் முன்காட்டிய விருசெய்யுட்களின்படி தனித்தனி போயினவென்றால் பின்காட்டிய செய்யுளின்படி ஒரு நரம்பில் அந்நாடிகள் மூன்றும் நிற்கின்றனவென்று எப்படிச் சொல்லலாம். வைத்தியர் ஒருகையிற் பிடித்து மூன்றுநாடியும் பார்த்தறிவதெப்படி?

இது என் சிற்றறிவிற்குத் தோன்றாமையால் வாகட சாஸ்திரத்தை முற்றுணர்ந்த பெரியோர் இதிற் பிழையிருந்தாற் பொறுத்து நல்விடையெழுதும்படி மன்றாடுகிறேன்.

உடுப்பிட்டிபள்ளிக்கூடம். ௲அ௱சஉ ஆ } ஓர்மாணாக்கன்.
ஐப்பசி மீ அ தி

Answer to a question on Tamil Grammar in the last No.

அஞ்ஞானவிருளிரிய—மெய்ஞ்ஞானவொளிவிரிய
எஞ்ஞான்றுந்தாரகையை—விஞ்ஞாதஞ்செய்கின்ற
துரையவர்களே,

தங்களுதயதாரகை, உம். புத்தகம். ௰௯ஞ் சஞ்சிகை, உ௱௯உம் பக்கத்தில் "நிகண்டு சூடாமணி மதுரகம்பூநேரே" என்னும்பாட்டின் பேரால் றீ, றீ. வேதகிரிமுதலியார் அவர்களை வினாவியயாழ்ப்பாணமாணாக்கனுக்கு நான் பின்னாலெழுதும் விடையையும் அதனோடு சேர்ந்த வினாவையுந் தயவுபண்ணி உ௰ஞ். சஞ்சிகையிற் பிரசுரஞ்செய்யும்படி மன்றாடுகிறேன்.

விடை.

மாணாக்கனே,

நீரிப்படி வீண்கேள்வியைக் கேட்டதென்ன? சதுரகராதி வாழ்த்துமாலையில் "நிகண்டு சூடாமணி மதுரகம்பூநேரே, யகராதி சர்க்கரைமுன்னாக-புகைகொல்லர்-வீதியினிற் சூழ்விலைகூறனோர்பிங்கலையு-மோதிவ கரம் முரிச்சொலும்" எனவிருக்க ஈற்றடி "ஒதிவாவாகரமும்உரிச்சொலும்" எனவிருக்குதென்று நீர்சொன்னதேன்? மனதிலும்மை யென்னீரா!-கற்றோரையுள்ளீரா-"ஓதிவாகரம்முரிச்சொலும்" என்பதின் சீர்களைபபிரிக்கிறேன் காண்பீராக. ஒதிவாக, கூவிளங்காய்-ரம்முரிச்சொ, கூவிளங்காய்-லும், நாள்-மாணாக்கனே இதைக் கண்டுதேறும். இதுசரியென்று உமது மனமே கூறும். இனிமேற் கேள்வகேட்கத் துணிந்தால் யான்கேட்கிறதுபோற் கேட்பீராக.

வினா.

மேற்குறித்த சதுரகராதி வாழ்த்துமாலையில், ௮ங். கவி "பன்னிரண்டு தொகுதிபாராமல் பண்ணையின்- பின்னமொழி இக்கவியிவித்தருண- மென்னபய-னென்றெண்ணி யேங்காதெடுக்கவகராதி-தின்றளித்தார் வீரமுனி" இதில் முதலடி இலக்கணங்களுக்குச் சரியா? ௰ங், கவியில் மூன்றமடியாகிய "பாவலர்க்குமாவனுறப்

பாடப் பிரசங்கிக்க" என்பதின் சீர்பிரிப்பதெப்படி? எங், கவியில் "கோர்த்து" என்ற சொல்லின்பகுதி யாது?

உடுப்பிட்டிபள்ளிக்கூடம், ௲அ௱சஉம் ஆ௵ இப்படிக்கு
ஐப்பசி மீ௳ யங் தீ௳. முருகேசர் சந்திரசேகரன்.

PARRIAN CASTE.

To the Editor of the Morning Star

SIR,

I shall feel much obliged by your giving place to the following, in a corner of your valuable paper, should it meet with your kind approbation.

Parri, literally speaking, signifies sound, and Parrian (not Parriah) the person who beats Tom Tom; whereas, I have often observed it made use of by Gentlemen, and others, as epithets; such as, *Parriah dogs, cocks*,&c It is very probable they have adopted the term, (and that without any just foundation) from its being applied to the lowest Caste in India; but at the same time, they do not consider, that while there exist *Parriah dogs*, there ought also to be dogs for all the Castes to distinguish them in like manner. Your judicious readers will now see, that the word *Parriah* has thus been misapplied, and therefore I hope they will discontinue the use of such expressions. I have a great deal more to say on the subject, but unwilling to be prolix, I shall make an end of it, and proceed to offer some remarks in favour of *Parrians* as they are a class of people who experience very undeserved treatment.

When the English landed at Madras in 1628, it was the *Parrians* that were hospitable to them in preparing food, and affording that assistance which was so essentially necessary in a foreign land; in short, they were faithful domestics both in field and garrison. Though such obligations are due to the *Parrians*, the Gentlemen of the Madras Presidency seem quite unconcerned as to whether they deserve better stations than those of butlers, Dubashes, cooks, &c. nor do I know what good reason there can be that Gentlemen, high in office, allow such appointments, as Sheristadars, Moonsiffs, Writers, Tassildars, &c. to Brahmins, Moodelliars, Pillays, and Naecks, &c. who in former days, fled at the very sight of the Europeans, and were not of any use whatever to them. On the contrary, now-a-days, these high caste Natives have ingratiated themselves by various theories with the European Gentlemen, insomuch, that the *Parrians* (the original Indian companions of Europeans) are not suffered to mount a step higher than cutler, which is certainly very unjust and heart-rending to the class of persons alluded to.

The object I have in view in writing this, is merely to give your numerous readers some idea of the *Parrians*, in order that the term may be more universally understood.

Dindigul 10th. September 1842.

Your Most obedient servant,
M. ANTHONY, *School Boy*.

விளம்பரப் பத்திரிகை.

(A pretended miracle-worker exposed.)

அட்டாவதான விதிகளை அறியாமல் அட்டாவதானியென்றொரு பட்டங்கட்டிக்கொண்ட தியாகராயனென்னும் ஒரு தந்திரக்காரன் போன வருடத்தில் மதுரைக் கோவிலில் அட்டாவதானஞ் செய்தபொழுது கோவிலதிபதிகள் தமிழ்ப்புலவர் வேதகிரி முதலியாரைப் பார்த்து இவன்அவதானத்தைச் சோதியுமென்றார்கள் முதலியார் சோதிக்கையில், அவன் இலக்கணவிலக்கியந்தெரியாது நான் சுப்பிரமணியர் வரப்பிரசாதத்தினாலே அவதானஞ் செய்து வருகிறேனென்றான். அதற்கு முதலியார் வரப்பிரசாதமென்றது பொய் அவதானத்துக்கு விதியிருக்கின்றது மெய்யென்று அவனை மறுத்துச்சில சாட்சி காட்டினார். அங்கிருந்த யாவருமெய்தானென்று சொன்னார்கள்.

இவ்வருடத்தில் அந்தத் தியாகராயனெனகிறவன் திண்டுக்கல்லில் மகா கன. சிரஸ்தார் வெங்கிடராயரவர்கள் வீட்டில் வந்து அவதானஞ் செய்து பரிசுபெற்றுக்கொண்டு சுப்பிரமணியர் வல்லமையினாலும் பரதேவதை வல்லமையினாலும் அவதானஞ்செய்கிறேனென்று ஊர்ச் சனங்களை வஞ்சித்துச் சொன்னதுமல்லாமல் கண்ணாடிக்குள்ளே எந்தத் தேவதையைக் காட்டவேண்டுமோ அந்தத் தேவதைகளையெல்லாங் காட்டுவேனென்று பலரும் அறியும்படிக்குச் சொல்லி அவதானத்திலே தன்போலும் வல்லவர்களில்லையென்று பெருமைபாராட்டினான். அதுகண்டு,

தமிழ்ப் புலவர் வேதகிரி முதலியார் மாணாக்கர் ஆறுமுகக்கவிராயரானவர் மகா கனம்பொருந்திய இலாரணிசையரவர்கள் வீட்டிலே ஐயரவர்கள் முன்பாகவும்,மகா கனம்பொருந்திய கிறேனையரவர்கள் முன்பாகவும் மற்றும் பிரபுகள் முன்பாகவும் அட்டாவதானஞ்செய்து இது தேவ வல்லமையல்ல சூத்திர விதிப்படி செய்கிறதென்றார். அதைக் கண்ட சனங்கள் யாவரும் மெய்யென்று ஒப்புக்கொண்டார்கள். அன்றியுந் தியாகராயன் அவதானத்தைப் பார்க்கிலும் ஆறுமுகக்கவிராயர் அவதானம் அதிகமென்று மெய்ச்சிக்கொண்டார்கள். இதைக் கேள்விப்பட்ட மகா கனம்பொருந்திய (W. Elliot, Esq) கலேக்கட்டா உல்லியம் எல்லியேட்துரையவர்கள் தமது கச்சேரி வாசலிலே அந்தத் தியாகராயனை வரவழைத்து மகா றீ. றீ. கமாலுபு சேர்துரையவர்களையும், மகா றீ. றீ. இலாரணிசையரவர்களையும் மகா றீ. றீ. கிறேனையரவர்களையும், சில துரைச்சாணிகளையும், பல பிரபுக்களையும் மகா றீ றீ. சிரஸ்தாரவேங்கிடராயரவர்கள் முதலான கச்சேரி உத்தியோகஸ்தர்களையும் ஊர்ச் சனங்கள் சற்றேறக்குறைய இரண்டாயிரம்பேர்களையுங் கூட்டமாகக் கூட்டி அட்டாவதானஞ் செய்யும்படி கட்டளையிட்டார். அவதானம் நடந்து வருகையில் இராயரவர்கள் வேதகிரிமுதலியாரைக்கொண்டு சில கேள்வி கேட்கச் சொன்னார்கள். முதலியார் கேட்ட கேள்விக்கு மறுமொழி சொல்லத் தெரியாதென்றான். பின்பு முதலியார் மாணாக்கர் எழுந்து இலக்கணத்தைப் பற்றிக் கேட்டபொழுது, அவன் சொன்னது இலக்கணமறியேன் உலக்கடமறிவேனென்றான். அதன் பின்பு சென்ன பட்டினத்தைச் சேர்ந்த பையனூர் ம. றீ றீ. சிதம்பரமுதலியாரவர்கள் எழுந்து அவதானியைப் பார்த்துச் சுப்பிரமணியக்கடாட்சமுள்ள நீ இப்பொழுது சொல்லலாமே என்றார். இலக்கணவிலக்கியம்படிக்கவில்லையென்றான். மறுபடி, ம. றீ றீ. சுருங்கு உபதேசியாரவர்களும், ம. றீ. றீ. ஸ்ரீ உபாத்தியாரவர்களும் கல்லணிவைக்குங் கணக்கை வினாவினார்கள் அதுவுந் தெரியாதென்றான். அட்டாவதானத்திலிக்கல்லணியுமொன்றல்லவாவென்றதற்கு ஒன்றுந்தெரியாதென்றான். அவன் அவதான தந்திரஞ் சொல்லுகிறோம். கல்லும் நெல்லும் வேறுள்வைத்தெண்ணிச் சொன்னான் சொற்கட்டானசதுரங்கம் கிட்டாக வைத்தாடினான் பழைய பாடல்ப் பெயர்களை மாற்றி வேறு பெயர்களை வைத்துச் சொன்னான். இந்தத் தந்திரங்களைச் சனங்கள் அறியாமல் முன்பு தேவன் செயலாலே செய்தானென்று நினைத்துப் பின்பு பித்தலாட்டமென்று பலருங் கண்டார்கள். இவன் முன்னம் அவதானஞ் செய்தவர்கள் பேரைக் கெடுக்க ஏற்பட்டான். இவனுடைய தந்திரங்களை உலகத்திலுள்ள பேயர்களனைவருமறிந்து எச்சரிக்கைப்படுங்கள் இப்படியே அஞ்ஞானத்தாருக்குள் அநேகர் சனங்களை மோசப்படுத்தத் தந்திரங்களைச் செய்து உலகத்தை வஞ்சித்துவருகிறார்கள். ஆனதால் எவ்விதமான காரியங்களையுந் தங்கள் தங்கள் சுய புத்தியினாலே ஆராய்ந்து சோதித்தால் தந்திரங்களை இலேசாய் அறிந்து சத்தியமாகிய நல்வழியின்னதென்று தோன்றச் செய்யும்.

(Answer to an inquiry on Grammatical Tenses in No. 19.)

கனம்பொருந்திய உதயதாரகை முகாமைத்துரை அவர்களுக்குச் சந்ததமும் வந்தனமுமுந்துதும்.

ஒய், இயாழ்ப்பாணக்கச்சேரி இலக்கண நுட்பவிசாரணைகாரனே, காலத்தைப்பற்றி நீர் கடாவிய கடா மிகுதிண்மையும் வெகு நுண்மையும் பலவன்மையுஞ் சிலவுண்மையுமானது. ஆனால் இப்படிப்பட்ட கிஞ்சித்துவமான கேள்வி இலக்கணநுட்ப விசாரணை

காரணைப்போற்பட்டவர்களுக்குத் தகுந்ததல்ல. "எண்ண"மென்னுமொழி முக்காலங்களிலும் வருமென்று அவ்விலக்கணி சொன்னது சரியே சரி, இதற்காக்கும் அவரை இலக்கணியென்பது, அப்படிச்சொல்லவும் பெறும்.

"கைக்கூலி வாங்குகிறதற்கெண்ண" மென்றதுங் "கைக்கூலி வாங்கினதைக்கண்டேன்" என்றதும் இலக்கணமுறையிற்கருத்துக்கள்தான், அல்லவென வெம்மாலாகாது. (ஆனால் அவ்விரண்டும் ஒரேகருத்தைக்கொள்ளுமெனப போகாது; அல்லவெனில் அவற்குச்சிறியநீராய்விடும், அப்பவுமேற்கமாட்டாரோ, மாட்டாராயிற் றமதுகோலைநாட்டட்டும், நாட்டில் நியாயங்காட்டட்டும் காட்டில் விதி நீட்டட்டும) இலக்கணச் சாட்சியுந் தேவையில்லையே, இடைக்கணத்திற்கினமுண்டென்பதைக்கொள்ளாற்குப்போல இவற்கும் இதில் மயக்காமோ, நன்றாயிற்று, சபாசு இவர்திறம் இவ்வளவோ, படியாதபெண்களும் இதற்குச்சாட்சி சொல்லக்கூடியதாயிருக்க நீரிலக்கணிகளுக்கேன் அபயமிட்டீர்? அவர்தான் ஒரு இலக்கணியென்று பயந்தீரோ, அவர் திறம் இதிற்காணாதோ, காணுமாயினினிப்பேணாரோ, "வாங்கவெண்ண" மென்றதும் "வாங்கினதைக்கண்டே"னென்றதும் ஒருக்காலுமொரே கருத்திலேவராது. அப்படி அல்லவென்பவர்களும் அவரை அறியாதவர்களாக்கும், ஆனால் இலக்கணிகள் இன்னுஞ் சொல்லட்டும.

இப்படிக்கு

௲அ௱சஉஆ யதி ஐப்பசிமீ யாழ்ப்பாண மாணாக்கன்.

உதயதாரகைப்பத்திரத்தின் எடிற்றர் அவர்களுக்கு.

ஐயாவே,

இதனடியிற்காண்கிற கடிதத்தைத் தயவுபண்ணித் தங்கள் மறுபத்திரிகையிற் பிரசித்தம்பண்ணும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

தாங்கள் புரட்டாதிமீ. முதற்திகதி பிரசித்தப்படுத்திய பத்திரிகையை வாசித்தபொழுது அதில் நூதனக் கதையென்றோர் பொய்யாங்கமான கதை பிரசித்தப்படுத்தியிருக்கிறதால் மிகவே துக்கிக்கிறேன், ஏனெனில், எந்தப்புத்தகத்தில் அல்லது எந்த அதிகாரத்தில் அந்தவிதமாகச் சொல்லியிருந்தது. நான் நம்புகிற விதத்துக்கு பாவசங்கீர்த்தனங் கேட்பேனென்ற அந்ததேற்செல், என்கிற ரோமானு குருவானவர் அல்லது பணங் கொடுப்பேனென்ற துரைமகன் உதயதாரகைப்பத்திரத்துக்கு எழுதினதோ ஐயோ ஏனிப்படி மெய்யான திருச்சபையைப் பழிக்கவேண்டும். ரோமானு வேதத்தின் உண்மையை, நீங்கள்அறியாதே போகில் அதைப் படித்தறிய வேண்டாமோ? மேலும், யோவான் உய. அதிகாரம். உரு. சுலோபத்தில் கிறிஸ்துநாதர் திருவுளம்பற்றினபடி, ரோமானு வேதக்குருமார் பாவசங்கீர்த்தனங் கேட்கவும் பாவங்களைமன்னிக்கவும், கிறிஸ்துநாதரால் தத்துவமடைந்திருக்கிறதை நீங்கள் அறியீர்களோ?

ஆனால் கிறிஸ்து பிறந்த அஞ்ஞூரும் வருஷம் ரோமானுவேதத்திலிருந்து, பின்னத்தை மறுதலித்துப் புறற்றெஸ்ருன்றென்னுமதத்தை உண்டுபண்ணின லூத்தேரென்கிற குரு அல்லது அந்த மதத்தைநடப்பிக்கிற குருக்களுக்குக்கிறிஸ்துநாதர் எந்தக்காலத்திலென்கிலும் பாவ உச்சாரணங் கேட்கவும் பாவங்களை மன்னிக்கவும் உத்தாரங் கொடுக்கவில்லையென்று ஆருமறிவார்கள். அதேனென்றால் புறரெஸ்ருன்றுவேதம் மெய்யான திருச்சவையுமல்ல, எந்தக்காலத்திலென்கிலும் கிறிஸ்துநாதரால் உண்டுபண்ணப்பட்டதுமல்ல, நான் நம்புகிறவிதத்துக்கு உதயதாரகைப் பத்திரத்தின்எடிற்றர் புறற்றேஸ்ருண்டுமதத்தைஉண்மையென்றெண்ணிமெய்யான ரோமானு வேதத்தைப் பழித்ததாயிருக்கும். ஆனால் அப்படி அவர் எண்ணுவாராகில் கிறிஸ்துநாதரால் எந்தக்காலத்திலேபுறற்றெஸ்ருண்டு மதமுண்டுபண்ணப்பட்டதென்று தேவவாக்குப்புஸ்தகத்தின் உண்மையைக்கொண்டு இந்தப் பத்திரிகைவழியாய் எனக்கு எண்பிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

கொழும்பு புரட்டாதி மீ உரு தி — இப்படிக்கு

௲அ௱சஉ ஆ. — ஓர்சோபலஸ்கிறைபர்

C. S, R. C.

பத்திராதிபர் குறிப்பு:

தெற்சல் என்ற துரையையும், பாவம்விற்றுப் பணம் வாங்கிவந்த ரோம ஏகாங்கியையும் பற்றிச் சொல்லிய சரித்திரத்தைச் சேலெமுவென்ற ஊரில் ஸ்தாபிக்கப்பட்ட வேதநூல் பயிலிடத்துக்கு முதலாளியாயிருந்த கனம்பொருந்திய ஆவுக்கினியென்னுங் குருவானவர் செய்த "சமயானுசிரத்தேற்ற விளக்கம்" என்ற புத்தகத்திலிருந்தெடுத்து உதயதாரகை உம். புத்தகம். யசூஞ் சஞ்சிகையில் இங்கிலிஸ் பாடையிலும் யஎம். சஞ்சிகையில் தமிழ்ப் பாடையிலும் பிரசுரஞ் செய்தோம். இவர்களைப் பற்றிய இச்சரித்திரத்தைப் பற்பல போதிய அத்தாட்சியைக்கொண்டு பற்பல காலங்களிலுஞ் சொல்லப்பட்டிருக்கிறபடியால் அது அசத்தியசரித்திரமென்றையங்கொள்ளுவதற்குச் சற்றென்கிலும் நியாயமில்லை. இன்னும் இவைபோன்ற சரித்திரங்களை உதயதாரகையின் அதிபதிகளாகிய நாங்கள்,ரோமான் மதத்தை இகழ்வதற்கென்றெண்ணி இப்படி எல்லாம் அச்சடித்துப் பிரசுரஞ்செய்து வருகிறோமென்று இவர் காரணமின்றி உத்தேசிக்கிறார் போலும், எவ்விடங்களிற் பார்த்தாலும் புறொடெஸ்டாண்டு மதத்தவர்களிலும் ரோமான் மதத்தவர்களே அதிகதூரம் யுத்திசாலிகளென்றுங் கனமாகக் கற்றறிந்தவர்களென்றும், கத்தோலிக்க மதம் வழங்கிவருகிற ஸ்பானியா, புடுத்துக்கால், இத்தாலீ, தென் அமெரிக்கா முதலிய இடங்களிலுள்ள சனங்கள் புறொடெஸ்டாண்டு மதம் வழங்கிவருகிற இங்கிலாண்டு, ஸ்கொத்திலாண்டு, அயிக்கிய தேசமுதலியவிடங்களிலுள்ள சனங்களைப் பார்க்கிலும் அதிகம் படித்தவர்களென்றும், பாக்கியவான்களென்றும், இவர் எங்கட்கொருவேளை எண்பிக்கக்கூடியதாயிருக்கும். புறொடெஸ்டாண்டு மதத்தவர்கள் அறிவிலிகளென்பதுண்மைப் பேச்சானால் பின்னை நாங்கள் அப்படித்தானென்று சொல்லவேண்டியிருக்கின்றது. ஒன்றுமறியாத புறொடெஸ்டாண்டுமதத்தவர்களுக்குக் காட்டும்படி இவரை நாங்கள் நேயத்துடன் கேட்டுக்கொள்ளுகிறதென்னவானால், ரோமானித்தார் அறிவில் நடிராகியான சனங்களுக்கெவ்வளவதிகமாகக் கல்வித் தேர்ச்சியைப் பயிற்றிப் பரப்பியிருக்கிறார்களென்பதை நாங்கள் அறியும்படி கத்தோலிக்க மதம் வழங்கி வருகிற மேற்கூறிய இடங்களில் எவ்வளவு பேர் வாசிக்கறியாதவர்களாயிருக்கிறார்களென்பதை அவர் எங்களுக்குச் சொல்லிக்காட்டட்டும். எவ்வளவு பெயரென்றிவராராய்ந்தறியும்பொழுது, இவர்களில் எவ்வளவு பேரிடத்தில் வேதாகமமிருக்குதென்றும் சொல்லும்படி நாம் இவரிடத்திற் கேட்போம் இவராற் கூடாதேல், இவரிப்போதிருக்கிறதிலும் அதிகம் புத்திவானாய்வரத்தக்க சில காரியங்களை ஒருவேளை நாங்கள் இவருக்கெடுத்துக்காட்டக்கூடியதாயிருக்கும்.

இவரெடுத்துக்காட்டிய யோவான், உய. அதி. உரு. ம் வசனத்தைக் கிறிஸ்துநாதர் தமது அப்போஸ்தலருக்குரைத்தார். பாப்புமார்களுக்கு அல்லது ரோமான் குருக்களுக்கு இந்த வசனத்தைத் தொட்டோருடந்தையுமில்லையென்றதாக நாங்கள் நினைக்கிறோம். உ. கொறிந்தியர் யஉ. அதி. யஉ, யரு. வசனங்களிற் கூறியபடி, பாப்புமார் அப்போஸ்தலனாகிய பவுலின் வண்ணமாய் அப்போஸ்தலத் தொழிலினடையாளத்தைக் காட்டும்பொழுது பாவமன்னிப்புக்குத்தரவுமவர்களுக்களித்திருக்குதென்றும் நாங்கள் நம்புவோம். காட்டாவிடில் நாங்களும் நம்பமாட்டோம். இன்னும், கிறிஸ்துநாதர் பிறந்து ஏறக்குறைய (௲ா) வருடத்தின் பிறகு மார்த்தின் லூதர் என்பவர் ரோமான்மதப் பத்தியைவிடடொழிந்து பதிதனாகிப் புறொடெஸ்டாண்டு என்று சொல்லப்பட்ட ஒரு நவ மதத்தைப் பூமியின் கண்ணே நாட்டிவிட்டாரென இவர் சொல்லிப்போகிறார். கிறிஸ்துநாதருக்கு (௲௫ா) வருடத்தின் பிறகு மார்த்தின் லூதரிருந்தாரென்று புறொடெஸ்டாண்டு மதத்தவர்கள் சொல்லி வருகிறதினால் இவர் கணக்குக்கு நாமனைவரும் அறிவிலிகளாய்த்தானே இருக்கிறோம்போலே பின்னை, எம்மதியீனத்தையிவர்தானே திருத்தக்கூடும்.

கிறிஸ்துநாதர் நாட்டின திருச்சபை நிலையைச் சீர்ப்படுத்தினதினால் லூதர் செய்த ஒரு பெரிய வேலையென்னவென்றால்,சுத்த சத்திய வேத வசனத்தைப் பற்றி வெகு காலமாய் ஒன்றும் அறியாமலிருந்த தமதூரவர்களுக்குப் பரிசுத்தாகமத்தைக் கொடுக்கப்பண்ணினார். அதின் வழியாகக் கிறிஸ்துநாதருடைய திருச் சபை ஒழுங்கின் போக்கை இன்னதென்றறிந்துகொள்ளுகிறதற்கும்,அறிந்து மெய்க்கும் பொய்க்குமுள்ள பேதத்தை வரையறுத்துக் கொள்ளுகிறதற்கும் ஏதுவாயிற்று. ஏதுவானபோதே பராபரனுடைய சாட்சிக்கும் நியாயப்பிரமாணத்திற்கும் விலக்காயிருக்கிற ரோமான் சபையிற் காணப்பட்ட பழுதுகளைவிட்டோய்ந்து அதற்கு விரோதமாயும் நிற்கும்படியாயிற்று. இதினிமித்தமாகத்தானே அவர்களை அவர்கள்சிநேகிதர் சமயானுசீலரென்றும் புறொடெஸ்டாண்டென்றும், ரோமான்காரர் அவர்களைப் பாசாண்டரென்றும் மார்க்க விரோதிகளென்றும் அழைத்தார்கள். காரியமிப்ப

டிட்போக, பின்னை லூதர் நவமதத்தைத்தொடுத்து அல்லது சபையை நாடினாரென்று நினைக்கிற தற்கென்ன நியாயம்? ஒரு புதுப் புடைவையில்அழுக்குப்பிடிக்கும்பொழுது அதைநாங்கள் கழுவுகிறோம். அப்படிச் செய்தவேளையில் அதொரு புதுப் புடைவை அல்லது வேறொரு புடைவையென்று சொல்லுவோமா? ஒருக்காலும் அப்படிச் சொல்லவேமாட்டோம். லூதரிந்த மேலான காரியத்தைச் சபைநயத்துக்காகவே செய்தார். அவர் நவமானதொன்றையும் எடுத்துத் தொடுக்கவில்லை. அவர் பாப்புஉத்தியோகத்தால்வரப்பட்ட கசாகூளக்குப்பையைய் பெருக்கித் தள்ளிவிட்டுச் சுவிசேடத்தின்அழியாத பொக்கிஷங்களை எடுத்து வெளியிற் காட்டினார். ஆகையால் புறேடெஸ்டாண்டு சபை கிறிஸ்துநாதராலும் அவருடைய அப்போஸதலர்களாலும் நட்டப்பட்டதென்பதற்குச் சந்தேகமில்லை.

சமயானுசிரத்தேற்றத்துக்கு முன்னே லூதர் சபையிலுள்ள சீர்கெட்ட நிலையைப் பற்றி உதயதாரகையிற் பின்னொரு சஞ்சிகையிற் பிரசுரஞ்செய்வோம். அத்தை வாசிப்பவர்கள் லூதர் சபையிலுள்ள சீர்கேட்டைக் கண்டதினாலே சமயானுசிரியராகப் புறப்பட்டதற்காதாரமாக அநேக திட்டாந்தங்களைக் காண்பார்கள். இதைப் பற்றி அதிகமாய்ச் சொல்ல நேரமில்லை. ஆகையால் உதயதாரகை உ. புத். ௰. ஞ் சஞ்சிகையில் "உண்மை விரும்பி" என்றொருவர் கேட்ட கேள்விக்குக் கொடுக்கப்பட்ட மறுமொழியை உய்த்துணரக்கடவர்.

[Translation of the above.]

To the Editors of the Morning Star.

GENTLEMEN,

Please have the goodness to publish this in your next No. I regretted very much to read the false anecdote about Tetzel and the Saxon Gentleman published in the 17th No. of the Morning Star.—Pray Sirs, in what Book and in what Chapter was that story related? Did that Saxon Gentleman who offered Tetzel (the Romish Monk) some crowns for the pardoning of his sins communicate that anecdote to the Editors of the Star? Ah! why do you despise the true catholic church? If you do not know the truth of the Roman Church, is it wise for you to remain in ignorance?

Do you not know that Roman Catholic Priests are empowered to pardon sins? See John xx. 23.

Every body knows that about 500 years after Christ Martin Luther who had apostatized from the papal Church invented another system of religion called "*Protestant Religion.*" Every body knows that the protestant Priests have never been empowered by Christ to pardon sins, because the Protestant is not a true church and it was never planted by Christ. I truly believe that the Editors of the "*Morning Star*" are greatly mistaken in supposing that the Protestant Church is a true church, and thus abuse the true papal church. If they believe that the papal church is not a true church, they ought to tell me through the medium of the "Star," *at what time did Christ establish the Protestant Church.*

Your's, &c. A Subscriber. C. S,

Colombo, Sept. 23 1842. *R. S.*

The story respecting Tetzel and the Monk inserted in the 17th. No. of the Morning Star, was extracted from a work entitled "*History of the Reformation*" by Rev. J. H. MERLE, D'Aubigne, *President of the Theological School in Geneva.* The story has however been repeated many times before, on different authorities, and we suppose there is no reason to doubt its correctness. Our correspondent assumes that it is through *our ignorance* that we venture to publish such stories as make light of the Roman doctrines. If it is the fact that ignorance is predicable of Protestantism, then we must plead our ignorance. Perhaps he can prove that Roman Catholics are universally more wise and learned than Protestants, and that in those countries where the Roman Catholic Religion prevails, as Spain, Portugal, Italy, South America, &c. the people are better educated and more happy than in Protestant countries, as England, Scotland, United States, &c. We wish our Correspondent to show us and our ignorant Protestant readers how many people there are in the Roman Catholic countries mentioned above, who cannot read, that we may judge of the superior influence of Romanism in promoting education among the common people, and when he has ascertained this, we shall be glad to have him tell us, how far the people possess the Scriptures. If he is not able to do this, perhaps we can help him to a little information which will make him wiser than he is now.

The verse in John xx, 23, referred to by our correspondent, was spoken by Christ to his Apostles, and we believe it has no reference whatever to Popes or Roman Catholic Priests. When they show the signs of their apostleship after the manner of Paul 2 Cor. xii. 12. 13, we may believe that the power to remit sin is conferred on them but not before. Our Correspondent further says that every body knows that about 500 years after Christ, Martin Luther apostatized from the Roman faith and invented a new Religion called the Protestant Religion, &c We are so ignorant as to suppose that Luther lived about 1500 years after Christ; perhaps our Correspondent can tell us if we are in an error.

We are happy to inform our Correspondent that in defending the church which the Lord Jesus Christ established, Luther's great work consisted in putting his countrymen in possession of the Sacred scriptures of which they had long been ignorant. This enabled them to understand the nature of the true church of Christ and to distinguish between truth and error; and thus were they prepared to resist and to forsake whatever they found in the Roman church, which was contrary to the law and to the testimony of God. On this account, they were called Protestants and Reformers by their friends, and heretics and apostates by the Romanists. There is no ground, whatever, for the charge that Luther formed a *new religion* or a *new church.* When a new garment is soiled, we get it washed; but may we then say that it is a new or another garment? Surely not. This important service Luther performed for the church. He invented nothing new. He merely removed the rubbish of papacy and exhibited the uncorrupted treasures of the Gospel. The religion of Protestants was established by Jesus Christ and his apostles.

We have an article selected for a future number of the Star on the corrupt state of Popery before the reformation, which will show our readers that Luther had abundant reason, from the state of the church at that time, to exert himself as a Reformer.

In place of further remark, we beg to commend to the notice of our Correspondent the observations contained in No. 10. of the Star, in reply to certain questions proposed by a "*Lover of Truth.*"

For the Morning Star.

Mr. Editor,

Will one of your Contributors who has made the subject his study furnish for the columns of your interesting Paper an article (or a series) bringing to view in full, a Biographical notice of the Authors of மூதுரை (Moothery—also Ooviyar, &c. by the same person) குறள் (Cural) நாலடியார் (Naladeya) and all other Tamul works of consequence, together with a full account of all their writings, with their style, and general character. One article might be devoted to each Author or Authoress, and a specimen of each of their works appended to it.

I feel assured that much valuable matter might thus be brought to light and much that would I think be interesting and instructive to many, and certainly to

September 30th. ONE SUBSCRIBER.

பஞ்சதந்திரக்கதை

மூன்றாவது.

சந்திவிக்கிரகம் அல்லது அடுத்துக்கெடுத்தல்.

PANCHA-TANTRA-KETEI.

The art of conquering an enemy by means of an affected friendship.

முன்னே பகையாளிகளாயிருந்தவர்களுடைய விசுவாசத்தின் நம்பிக்கை வைக்கலாகாது; நம்பினாலெப்படிக் காகங் கோட்டான்களின் குகையைக் கொளுத்தி நாசம்பண்ணினதோ அப்படியே நேரிடுமென்றதைக்கேட்டிராச குமாரர்களதெப்படிச் சொல்லுமெனச் சோமசன்மா சொல்லுகிறான்.

தென்றேயத்தின் மயிலை நகரத்தின் சமீபத்தில் ஒரு பெரிய வாலமரத்தில் மேகவர்ணனென்னுங் காகராசன் தன் கூட்டங்களோடு கூடவிருக்கையில் அங்கே, உருமர்த்தனனென்னும் இராசகோட்டான் கூட்டத்தோடு மலைக்குகையிலிருந்து வந்தால் மரத்தைவளைத்துக்கொண்டு இராத்திரியில் அகப்பட்ட காகத்தையெல்லாங் கொன்றுவிட்டு நாடோறும் போய்க்கொண்டிருந்தது. அதனால் அவ்விடத்தைவிட்டுவிடும்படிக்குக் காக்கைகட்கு நேரிட்டதனால் மேகவர்ணன் தன் மந்திரிகளையழைத்து நம் பகைவர் நாடோறும் இங்கு இராமாறு வந்து காக்கைகளைக் கொல்லுகிறார்கள். நமக்கா

ளுல் இராவிற் கண்டெரிகிறதில்லை. மேலும் அவர்களிருப்பிடமுமறியோம். அறிந்தால் அங்கே போய் அவைகளைக் கொல்லலாம். பகைவரை யசட்டைபண்ணினால, அது நோய்போற்பெருகிப் பொல்லாங்குவிளைவிக்கும். ஆதலால், இப்பொழுது சத்திவிக்கிரகம், பேதம், கலகமெனும் இவற்றுட்டக்கதிதுவென்று சொல்வீர்களென, இதைக்கேட்டு மந்திரிகள் அரசன் கேட்பதற்கு முன்னே தானே பிரதானிகளிதஞ் சொல்லவேண்டும். இல்லாவிடிற் கேட்டபிறகாயினும், விரைவாய்ச் சொல்லவேண்டும். அப்படிச்செய்யாமற் சும்மா இச்சகம்பேசுகிறவனை அரசனுக்குச் சத்துருவென்று நினைக்கவேண்டுமென்றிவ்வாறு சொல்லிப் பின்பு மந்திரிகள் ஐந்தும் என்னசெய்வோமென்று ஒன்றுக்கொன்று ஆலோசிக்கத் தொடங்கின். அப்போது அவைகளில் உத்தம சிவியென்பது அரசனை நோக்கி, மகராசாவே, வலியவர்களுடன் பகைபண்ணலாகாது, சமாதானமே தகுந்தது. ஏனெனில பகைவர்களை வணங்கிக் காலம்பார்த்து மோசம்பண்ணுகிறவர்கள் சுகமடைகிறார்கள். ஆற்றிற்றண்ணீர் நிரம்பிப் பெருகிவருகையில் வணங்கிய செடி நாசமடையாமற் பின்பு முன்போல நிமிர்ந்திருக்கின்றதே. நெருக்கமான காலத்திற் துட்டர்களுடனே சமாதானம்பண்ணி உயிரைக்காப்பாற்றினாற் பின்பெல்லாஞ் செல்வமுஞ் சம்பாதிக்கலாம். மேலும், தனக்குப் பலபேர் பகைவர்களிருந்தால், அவர்களில் ஒருவனோடு உறவுகொண்டெல்லாரையுங் கெடுக்கவேண்டும். நிலமும், நட்பும், பொருளுமாகியவிவற்றின் இருப்பைத் தன்னிடத்திலும் மாற்றானிடத்திலும் இவ்வளவென்று ஆராய்ந்துகொண்டு கூடுமானாற் பின்பவனுடன் எதிர்க்கவேண்டும். இல்லாவிடிற் கூர்ம விருத்தியை அநுசரித்துத் தனக்குப் பலமுள்ள காலத்திற் கிருஷ்ணசர்ப்பத்தின் வியாபாரத்தை யநுசரிக்கவேண்டும். ஏனெனில், கெலிப்புந் தோற்பும் ஒருவன்பங்கல்ல, ஆதலால்; மாற்றானுடைய வலியும் வலியின்மையும் பார்த்து ஏதுசெய்யத் தக்கதோ அதுசெய்யவேண்டும். அச்சமயத்திற் கொக்குப்போல் உறங்கியிருந்து, சமயத்தில் அதன் குத்தைப் போவிருக்குகவென்று பெரியோருஞ் சொல்லியிருக்கிறார்களேயென, இப்படியதன் வாக்கியத்தைக் கேட்டு இராசன் இரண்டாம் பிரதானியைப் பார்த்து உன் கருத்தென்ன சொல்லென, இரண்டாம் மந்திரி அவன் சொன்னவற்றிற்சிறிது நன்மையில்லை, ஏனெனில், பெரிய சங்கடம் நேரிட்டபோது, பகைவருடன் சந்திபண்ணலாகாது. நெருப்பினாற் காய்ச்சின நீர் அந்த நெருப்பையவியாதா? நம்மைக் கோட்டான்கள் வருத்துகின்றனவென்று அவர்களோடு சந்திபண்ணினாற் கொன்றுபோடுவார்கள். விஷமச்சுரமப்பியங்கனத்தால் வளருகிறதும்பாலும் நெய்யினானெருப்பு விர்த்தியாகிறுப்போலும் பொல்லாங்கு சம்பவிக்கும். தாஞ்சத்துரு வலியவனாமெளியோமென் பீரானால அதற்குச் சிந்தையில்லை. யானைபெரிதாயிருந்தாலும் அதைச் சிங்கக்குட்டி கொல்லா நிற்கும், ஆதலால், மனோபலத்தோடு பகைவரைக்கொல்லவேண்டும். அரசனுடைய கொடுந் தண்டத்தைப் பார்த்து வைரிகளியல்பாய்ப் பயமடைகிறார்கள். எங்கும்பரவியிருக்கிற பராக்கிரமசாலியாயும் எல்லாராலும் அறியப்பட்டவனாகியுமிருக்கிறவனெவனோ அவனே பாக்கியவான். இல்லாவிடிற் றுயின் யௌவனத்தைக்கொடுத்துப் பயனென்ன ஆதலாற் பராக்கிரமத்தால் உயிர்த்திருக்கிறவனே உயிருள்ளவன். மற்றவர்கள் பிணத்துக்கொப்பானவர்களென்றிப்படி அது சொன்னவற்றையெல்லாம் அரசன் கேட்டுப் பிரதானியைப் பார்த்து உன் கருத்தைச் சொல்வாயென, அது சொல்லுகிறது. அரசனே கேள், பகை தன்னிலும் வலிதாயிருந்தால் அவனோடு பொருத்தலாவது பொருதலாவது ஒன்றுஞ்செய்யாமற் றன்னிடத்தை விட்டு வேறிடத்துக்குப் போகவேண்டும் இதுவே நல்லது. ஏனென்றால், இவ்வேளை சண்டைசெய்யலாகாதென்றுவைரியின் பலத்தைப் பார்த்தெவன் தேசத்தைத் துறந்துபோகிறானோ அவன் பாண்டவர்களைப் போலச் சுகமடைகிறான். இதைவிட்டு எவன் செருக்குடனே யுத்தஞ்செயகிறானோ அவன் குலமுதலறக்கெடுகிறானென, இதைக் கேட்டரசன் நாலாம் மந்திரியைக் கேட்க நாலாம் மந்திரி தன்னிடம்விட்டுப் பேர்தல் தகுதியாய்க் காணவில்லை. ஏனென்றால், முதலைதன்னிடத்தில் இருந்தால் மலையொத்த யானையையும் இழுத்துக்கொண்டு போகின்றது, அதுவே தன்னிடம்விட்டுப் பேர்ந்தால் அதை நாய்களுமிழுத்துக்கொண்டு போகின்றன. ஆகையால, தன்னிடத்திலிருந்த நட்புள்ளவர்களை உதவிக்காகவழைப்பித்துக்கொண்டு பகைவர்களைக் கெடுக்க வேண்டும்.

(இன்னும் வரும்.)

௫ம். அதிகாரம்.

இல்வாழ்க்கை.—*The Domestic state.*

௪௪. பழியஞ்சிப்பாத்தூணுடைத் தாயின்வாழ்க்கை
வழியெஞ்சலெஞ்ஞான்றுமில்.

பு. பொருள் தேடுங்காலத்திலே பாவத்துக்குப் பயந்து (தேடியபொருளை மேற்சொல்லிய இயல்புடைய மூவர் முதலானவர்க்குந் தென்புலத்தார் முதலிய நால்வருக்கும்) பகுத்துத் தான் உண்பதை (ஒருவனுடையஇல்) வாழ்க்கையானது உடைத்தாயிருந்தால் அவனுடைய சந்ததியானது (உலகத்திலே நிலைத்திருப்பதல்லது) இறந்துபோவது எக்காலத்துமில்லை.

His descendants shall never fail who, living in the domestic state, fears vice (in the acquisition of property) and shares his food (with others.) *Drew.*

---

௪௫. அன்புமறனுமுடைத்தாயினில்வாழ்க்கை
பண்பும் பயனுமது.

பு. ஒருவனுடைய இல்வாழ்க்கையானது, (தன் மனைவிமேற்செய்யத்தக்க) அன்பையும் (பிறர்க்குப் பகுத்துண்பது முதலாகிய) தருமத்தையுமுடைத்தாயிருந்தால், அந்த உடைமையானது (அந்த வாழ்க்கைக்குக்) குணமும் பிரையோசனமுமாம்.

If the married life possess love and virtue, these will be both its duty and reward. *Drew.*

If love and virtue be thy constant guests,
Domestic life is blest, and finds in these
Its object and reward. *Ellis.*

---

௪௬. அறத்தாற்றினில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப்பெறுவதெவன்.

பு. தருமமார்க்கத்திலே மனைவாழ்க்கையை (ஒருவன்) செய்வானானால் (அவனதற்குப்) புறமாகிய வழியிலே சென்று பெறத்தக்க பிரயோசனமென்ன?

What will he who lives virtuously in the domestic state, gain by going into the other state. *Drew.*

பழமொழி—Proverbs.

அறிந்தநாயனென்றுகும்பிடத் தகப்பன்பட்ட கடனைத் தாவென்றானாம்
அறையிலாடி அம்பலத்திலாடவேண்டும்
அறச்சொல்வி உறவாடவேண்டும்
அதருமஞ்சேவகவிருத்தி
அவசாரிக்காணையில்லைத் திருடிக்குத் தெய்வமில்லை
அற்பனுக்குச் செல்வம் வந்தால் அத்தராத்திரியிற் குளை
அடியுதவுகிறுப்போல அண்ணன் தம்பி உதவுவானோ?
அழுதும் பிள்ளை அவளே பெறவேண்டும்
அற்பசினேகம் பிராணுவத்தை
அவசரத்திலே குண்டு சட்டியிலுங் கைநுழையாது

SUPPLEMENT TO THE
உதயதாரகை.—MORNING STAR.

௨. புத். சஞ்சிகை. ௨௰.] ௲௮௱௪௰௨ ௵. ஐப்பசி. ௨௰, தேயதி வியாழக்கிழமை, Thursday, October 20, 1842. [Vol. II. No. 20.

உதயதாரகை முகாமைக்காரருக்கு,

துரைகளே,

இதின் கீழ்வரைகிற சொற்பவரிகட்குத் தங்கள் உத்தமபத்திரிகையிலிடங்கொடுத்து அதின் மூலமாய்க் கொழும்பிலிருக்குங்கையொப்பகாரர் சகலருமறியும்படி பிரசுரஞ்செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்தப்பத்திரம் முற்பணம் வாங்கிக்கொண்டு கொடுக்கவேண்டியதாயிருக்க அப்படியே செய்யாமல் என் கைப்பணத்தைச் செலமதிபண்ணி மூன்றுமாதத்தைக்கொருமுறை நானறவிடுகிறதை யாவரும் அறிந்திருக்கிறதாக நம்புகிறேன். ஆனாற் சிலர் புதினமறிய மிகுந்தவிருப்பமுள்ளவர்களாய் இப்பத்திரம் புறப்பட்டமுகனேயாய் இத்தைக்கைப்பற்றி வாசிக்கத் தவருதிருந்தாலும் இதுவரையில் ஒருதுட்டுமதைப் பற்றிக்கைவிட மனதில்லாதிருப்பதைக் காணும்போது மகாதுக்கத்துக்கு நிமித்தமாகின்றது. இவர்கள் கொடுக்க இயல்வற்றவர்களல்லவென்பதை இந்தக்கிழமையிற் கொடாதிருந்தால், எனது மறுகாகிதத்தில் அவர்கள் பெயர்வழியால் அறிந்து நிதானிப்பீர்கள். இப்படியே இப்பத்திரத்தைப் பார்க்கப் பணப்பத்திரத்தை அதிகமாய் விரும்பியிருக்குஞ் சிலருடைய பெயர்வழிகளைக் கையொப்பகாரர் கணக்கிற் குறைக்கக் கட்டாயமாயுடன்படக் காரணமானது.

இப்படியே துகை வரவரச் சுருங்குகின்றமையாலும் பணஞ் சமையத்துக்குக் கைவந்து சேராததினாலும் இதுகட்டிவருகிறதாகக் காணவில்லை. ஆகையால் இந்தவருஷக் கடைசிமட்டும் பார்த்து மேலும் இப்படியே நடக்குமாகில் இதுவரையில் முறைபோலப் பணங்கொடுத்து நடத்திவரும் பிரபுக்கள் சகலருக்கும் எனது உபகாரவந்தனை புரிந்து இத்தால் விலகவெண்ணியிருப்பதையேலவே அறிவிக்கிறேன்.

இப்படிக்கு
தங்கள் ஊழியன்
P. Cangamanaden.

கொழும்பு, ௲௮௱௪௰௨ ௵
புரட்டாசி ௴ ௩௰தி

பத்திராதிபர் குறிப்பு.

மகா கனம்பொருந்திய ஸ்ரீ ஸ்ரீ. கஞ்சமாணதபிள்ளையவர்கள்சொல்லுகிற காரியத்தை அவர்களைச் சார்ந்த கையொப்பக்காரர் மாத்திரமல்ல மற்றெவருமதைச் சற்றே கவனிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். வரலாற்றிற் கூறிய பிரகாரம் எல்லாரும் பணங்கொடுக்கத் தாமதித்தால் சகலரும் முன்னிதாகப் பணங்கொடுக்கவேண்டுமென்றொரு ஒழுங்கு பண்ணவேண்டிவருகுது. கஞ்சமாணதபிள்ளை அவர்கள் தமது கையொப்பக்காரரிற் சிலர் முறைமைபோலப் பணமிறுக்கத் தாமதிக்கிறதினாலே அவர்கள் வெகு நாளாய்ச் சந்தோஷமாக நடாத்தி வந்த காரிய விசாரணையை விட்டோயமாட்டார்களென்று நம்புகிறோம்.

To the Editors of the Morning Star,

Sirs,

A question on Arithmetic having arisen in my mind, I wish very much to propose it to the readers of your valuable paper, and to receive a satisfactory answer; therefore I beg that you will be kind enough to give a corner in your impartial paper to the following question. The question is, three men, A, B, and C, traded in company, and put in money in the following proportions; A put in two dollars as often as B put in four, and as often as C put in six. B's money was in twice as long as C's, and A's three times as long as B's: they gained 88 dollars; what was each one's share of the gain?

As this is incomprehensible to my understanding, I request you, Sirs, to insert this in a corner of your valuable paper and to satisfy my doubts on this subject.

17th of October. W. W. (alias) M. T.

உதயதாரகை முகாமைக்காரரே,

ஐரோப்பாக்கண்டத்தவர்கள் அறிவிலும், கல்வியிலும், ஐசுவரியத்திலும் மற்றும் ஒவ்வொரு காரியங்களிலுந் தேறி உலகத்திலிருக்கும் மற்றெந்தச் சாதியாரிலும் அதிகப்பட்டு மேன்மையடைந்திருக்கிறார்களே. அத்தைக் கண்டு இந்து தேசத்தவர்களும் அவர்கள் செய்கைகளைப் பின்பற்றுகிறார்கள். அதற்குதாரணமாக வடதேசத்தில், கல்விச் சாலைகளும் அச்சுக்கூடங்களும் அறிவின் தேர்ச்சிக்கடுத்த மற்றுஞ் சங்கங்களும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இலங்கையில், யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் நமது தேசத்தவர்கள் அறிவிலே தேறும்படிக்கு உதயதாரகை உதய ஆதித்தன் என்னும் பத்திரிகைகளை அச்சடித்துப் பிரசித்தஞ்செய்துவருகிறார்கள்.

ஆனாலும் சென்ற ௴. ௩௰. தெயதி வெள்ளிக்கிழமை இரவு யாழ்ப்பாணம் சிவன்கோயில் மடத்தில் இவ்வூர்ப் பிரபுகளாகிய வயித்திலிங்கச் செட்டியார், முத்துவேலுச் செட்டியார், சிறுப்பு குருநாத முதலியார், இரகுநாத முதலியார், காசிநாதமுதலியார் இவர்கள் சைவசமயம் விளங்கும்படி ஒரு வேதாகம பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கும்படி ஒரு சங்கங் கூடினார்கள். அந்தச் சங்கத்தில் போதிய மனிதராக (௨௱) பேருக்கதிகமாக வந்தார்கள். இன்னும் அதிக சனம் வந்து கூடினதினால் அங்கே இருக்கவிடமில்லாமல் அநேகர் முற்றத்திலும், தாழ்வாரத்திலுங்,கதவடியிலும், தெருவிலும் நின்றார்கள். இந்தச் சங்கத்தில் மேற்சொல்லிய பிரபுக்கள் தமிழ்ச் சனங்கள் சைவ சமயத்தைப் பற்றி அதிகம் அறியாமலிருக்கிறதினால் பாதிரிமாருடைய கட்டு மதமாகிய கிறிஸ்துமதத்திலே போகிறார்களென்று அவர்கள் பேரில் இரங்கி அங்கே வந்தவர்களுந் தங்களைப் போல மற்றவர்கள் பேரில் மனதுருகவும் இரங்கவும் தங்களைப் போலப் பணங்கள் இச்செலவுக்குக் கொடுக்கவும் பண்ணத்தக்கதாக ஒவ்வொருத்தராக நெடுநேரமாகப் பிரசங்கஞ் செய்தார்கள். அதன் பின்பு பள்ளிக்கூடத்திற் படிக்கவேண்டியபடிப்புகளையுஞ் செலவுகளையும் பார்த்து அதன் பின்பு பணத்துக்குக் கையெழுத்துவைத்தார்கள். ஆனாலும் அவர்கள் துவக்கத்தில் அதிகம் பணஞ் சேராதென்றெண்ணிச் சிறு பள்ளிக்கூடம் வைக்க எண்ணினாலும், பின்பு தாங்கள் கொடுக்கக் கையெழுத்து வைத்த பணம் ஒரு மட்டான பள்ளிக்கூடம் வைக்கக் காணக் கூடியபடியாலும் அவர்களின் தொகை பணத்துக் கிரண்டத்தனைக்கதிகம். மற்றும்போதியவர்களுங் கொடுக்கச் சம்மதித்தபடியாலும் அவர்கள் நியமித்த பள்ளிக்கூடத்தை ஒரு பெரிய பள்ளிக்கூடமாகும் பொருட்டாக வருகிற மாதம் ௩ தெயதி துவக்கக் கூட நியமித்திருக்கிறார்கள். எங்கள் தேயத்தவர்களும் ஐரோப்பாக்கண்டத்தவர்களைப் பின்பற்றி அவர்களைப் போலக் கல்விமான்களும் ஐசுவரியவான்களுமாகப் போகப் போகிறார்களென்றதற்கு அதிக சந்தோஷமாகிறோம். ஆகையால் நமது மதத்தவர்களாகிய மற்றவர்களும் இதை அறிந்து சந்தோஷிக்கும்படி இத்தைப் பிரசித்தஞ்செய்ய உங்களை மன்றாடுகிறேன்.

இப்படிக்கு
ஆதிநாராயண செட்டியார் சிவப்பிரகாசன்.

பத்திராதிபர் குறிப்பு.

யோக்கியத்திலும், கனபாக்கியத்திலும், கல்வித்திறமையிலும், தத்துவவலிமையிலும் ஏரோப்பையர் உலகத்திலிருக்கிற மற்றெந்தச்சாதியாரிலும அதிகப்பட்டு மேன்மையடைந்திருக்கிறார்களென்பதை ஊர்ப்பிறந்த எங்கள் சிநேகிதர் அறியவந்ததினால், அவர்களைப்போலத்தாங்களும் அச்சுக்கூடங்களையும், கலவிச்சாலைகளையும், கல்வியின்தேர்ச்சிக்குபயோகமான மற்றுஞ்சங்கங்களையும் ஸ்தாப்பிக்கவேதுவாய்,வந்ததற்காகவும் நாங்கள் அச்சடித்துப்பிரசுரஞ்செய்யும் உதயதாரகைப் பத்திரம்வழியாய் அறிவானது எங்கும் பரம்பி உலாவிவருகுதென்றவர்கள் சொன்னதற்காகவும் நாங்கள் அவர்கள் அனைவர்க்கும்மிக நன்றியறிந்தவர்களாயிருக்கிறோம்.

சைவ மதம் தேவ மூலமாய் உண்டானதென்பதை உத்தம மனத்துடன் விசுவாசித்து அத்தை எங்கும் விளக்கஞ்செய்யும் பொருட்டுப் பள்ளிக்கூடமொன்றை ஸ்தாபிக்க முயன்றிருக்கிற எண்ணத்துக்காக அவர்கள் புகழப்படத்தக்க புண்ணியவான்களாயிருக்கிறார்கள். ஆனாலும் சைவ மதம் தேவ அருளாய் வந்து தோன்றினதோ அல்லவோவென்று சமுச்சயமுற்றார்களானால், இப்ப

டிப்பட்ட தொடக்கத்தைத் தொடங்குமுன்னமே அவர்கள் தங்கள் மதத்தின் பெலவுறுதியைத் திரும்பவும் நன்ருய் ஆராய்ந்துசோதித்தறிந்தார்களேயாஞல்அது அவர்களுக்குநலமாயிருக்கும். அப்படிச் செய்யாது விடுவரேல், அது கடைசியில் அவர்களுக்குஇகழ்ச்சியாகவும் நம்பிக்கைக்கிரண்டகமாகவும் போய்விடவேண்டியதாய் வருமே. இன்னும் "சிவப்பிரகாசன்" அவர்கள் கிறிஸ்தமார்க்கம் குருமாரால் எடுத்துத் தொடுத்த மார்க்கமென்றும், அதிலுட்படுஞ் சனங்களில்த் தாங்கள் அதிக இரக்கங்கொள்ளுகிருர்களென்றுஞ் சொல்லுகிருர். பின்னை அப்படிப்பட்ட மேலான காரியத்திலே தலைப்போடுபவர்கள் சத்தியத்தை நாடித் தேடுஞ் சற்குணனெவ்வொருவனுடைய மனதிலும் பொருந்தத்தக்கதும் பிடிக்கத்தக்கதுமான அத்தாட்சிகளினுல்த் தனது சாதனத்தை உறுதிப்படுத்த ஆரம்பிக்கவேண்டியது.

ஆகையால் கிறிஸ்தவர்களுக்குக் காட்டும்படி "சிவப்பிரகாசன்" அவர்களையாகுதல் அல்லது கிறிஸ்துமார்க்கத்திற் சேருகிறவர்களுடைய நயத்துக்காகப் பரிதாபப்படுகிறவர்களையாகுதல் நாங்கள் கேட்டுக்கொள்ளுகிறதென்னவென்றுல், (கவது.) சைவ சமயத்தை நம்புகிறதற்கென்ன நியாயமுண்டென்றும், (உவது.)கிறிஸ்துமார்க்கங் குருமாரால் எடுத்துத் தொடுத்ததென்று அவர்கள் என்ன நியாயத்தைக்கொண்டு சொல்லுகிருர்களென்றும அவர்கள் எங்களுக்கு எடுத்துக்காட்டட்டும். அப்படியே கிறிஸ்தவர்களாகிய நாங்களும் என்ன நியாயத்தைக்கொண்டு கிறிஸ்துமார்க்கஞ் சத்தியமென நம்புகிருேமென்றும், இந்து மதம் பிராமணர்களால் எடுத்துக் கட்டிவைத்தமதமென்பதற்கிதுவே சாட்சியென்றும், அஞ்ஞானிகளுக்கு நாங்கள் எடுத்துக் காட்டுவோம் அப்பொழுது கிறிஸ்துமார்க்கமோ அல்லது இந்த மதமோ எது உண்மையென்பதை வாசிப்பவர்கள்தாமே வரையறுத்துக்கொள்ளட்டும்.

(Translation of the above.)

To the Editors of the Morning Star,

GENTLEMEN,

The Europeans, it is well known, excell all others in point of influence, wealth, education, &c. Many learned people on the continent of India are imitating their example by establishing printing presses and schools, and also by forming literary societies. In Jaffna, the "*Star*" and in Colombo, the "*Sun*" have appeared to diffuse knowledge amongst the people.

On the 30th ult. the following respectable persons—inhabitants of Wannarpona, met and conferred with each other, and resolved to establish a school for the defence and propagation of the Siva Religion. Their names are Wytilingar Chettiar, Mootoovaloo Chettier, Shroff Cooroonadar Mudeliar, Regnardar Mudeliar, *&c* , &c. More than 200 respectable persons were convened. The house in which they met not being spacious enough for their accommodation, many of the attendants were obliged to stand in the veranda and road. The persons mentioned above, in consideration that many have been converted to Christianity (which is an invention of the missionaries) delivered several addresses to the meeting, expressing their compassion and pity for those who had been converted to Christianity. Afterwards, an order of studies for the school was formed and a subscription taken for its support. It was thought that the means would at first be adequate for the establishment of only a small school but the money contributed was twice as much as was expected. The meeting was adjourned to the 3d of October. Your's &c.

A. SEVAPERAGASAN.

We are happy to give insertion to the above communication. We congratulate our native friends on their having arrived at the conviction of the great superiority of Europeans over their countrymen in regard to "influence, wealth, and education," and that they are very desirous of imitating their example by "establishing printing presses, schools, and literary societies." We also thank them for the admission that our humble paper has contributed to diffuse knowledge among the people of Jaffna.

We think they are to be commended for the zeal they have displayed in resolving to establish a school for the defence and propagation of the Siva religion, *provided* they have a sincere belief that the Siva religion is of divine origin, but if they have doubts on this point, they had better re-examine the foundation of their faith before they commit themselves to an undertaking which may end in their shame and disappointment. Our correspondent speaks confidently, however, that *Christianity is an invention of the missionaries* and that converts to Christianity are objects of sincere compassion and pity to these zealous friends of the Siva faith. Those who make so bold an assumption as this should be prepared to sustain their assertions by such convincing proofs and arguments as to persuade every candid inquirer after *truth.* We therefore invite our correspondent or any of his friends whose bowels of compassion are moved at the pitiable state of the converts to Christianity—to show our Christian readers—1. what is the ground of their belief in the Siva faith? 2*dly.* what evidence there is to believe that Christianity is an invention of the missionaries. We will at the same time attempt to show our heathen readers—what is the ground of our faith in Christianity?—and what evidence there is for believing that the Hindu system is an *invention of Brahmins*, and the readers of the Star may judge whether Christianity or Hinduism is most worthy of their belief.

(The meaning of a verse in Scanda-Purana requested.)

கடலாற்சூழப்பட்ட திடலாய வுலகத்திற் சிறப்பாகும் உதயதாரகையே, உன் வழியாக இதன்கீழ் நான் எழுதாநின்ற செய்யுட் கருத்தங்கிடைக்கச் செய்வாயென்னும் நம்பிக்கையுடனேயிருக்கிறேன். அஃதாவது,

கந்தப்புராணம்.

காகபந்தரிற் கருமுகிற் காளிமங் கஞல
மாகநீள்கரி யாவையுங் குழுவொடுவாரிப்
போகன்மேயின மேற்றிசைப்புணரி யுண்டமையா
மேகராசிகள் குணகடல்மேவுவபோலும்,

என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இதன் கருத்தை எழுதற்கேலுமானவர்கள் யாதொரு பிழை இருந்தாலுந்திருத்தி யெழுதலாம்.

யாழ்ப்பாணம் இப்படிக்கு

௲௮௱௪௰௨௵ ௯தீ புரட்டாசிமீ ஓர் மாணாக்கன்.

புதினச் சங்கதிகள்.

சீனம.

இங்கிலீஸ்காரருக்குஞ் சீனருக்கும் நடந்துவந்த யுத்தத்தை விட்டோய்ந்து பிறகிட்ட ஆவணிமீ. ௨௯தீ. இருதிறத்தாரும் பண்ணிக்கொண்ட சமாதானபொருத்தனையாவது—

சீனர் இங்கிலீஸ்காரருக்கு (௨ கோடியே ௰ இலட்சம்) இறைசால் கொடுக்கவும், கொங்கோங்கு என்றபட்டினத்தை இங்கிலீஸ்காரருக்குக் கீழிருக்கவிடவும், சொல்லப்பட்ட பொருத்தப்பணம் (௩) வருடத்துக்குள்ளே இறுத்தொதுக்குமளவுஞ் சூசன், ஏமோய் என்றநகரிகள் இங்கிலீஸ்காரரதிகாரத்துக்குட்பட்டிருக்கவும், அந்தப்பணத்திலே(௬௰ இலட்சம்) இறைசால் அதிசீக்கிரமுடனே கொடுத்துத்தீர்த்துப்போடவும், பிக்கின் நகரியிலே இங்கிலீஸ் தானாபதியொருவர் வாசம்பண்ணவும், இங்கிலீஸ்காரர் வியாபாரத்தை நடப்பிக்கிறதற்கு (௫) துறைகளைத் திறக்கவும் பொருத்தனையாயிற்று.

தென் அமேரிக்கா.

பூகம்பம்.

மிகுதியும் பயங்கரப்படத்தக்க பூமியதிர்த்தல் தென்அமேரிக்காவிலுண்டுபட்ட அச்சணமே வீடுகளெல்லாம் படபடென்று கீழே இடிந்து விழுந்து தகர்ந்து நிலமடங்கலும் அதிர்ந்தது. பூதூளிகளெல்லாஞ் சோனமாரிபோலெங்கும் ஒருமிக்கப் பறந்து கடல்களெல்லாம் கொந்தளித்துப் பிறகு அக்கினியெங்கும் பற்றிப் பத்து நாளளவும்மும்முரமாய் எரிந்துகொண்டிருந்ததினுல் அநேக சனங்கள் உயிரோடே நிலத்திற் புதைக்கப்பட்டு மரண உபத்திரவை அடைந்தார்கள். இன்னும அநேகர் சடலமடங்கலும்பாடான காயப்பட்டதினுல் ஓடி வெளிக்கிட்டப்புறந் தப்பி உயிர் பிழைக்கிறதற்கேதுவில்லாமல் இருந்தது. இந்த வேளையிலே இந்த விக்கினங்களுக்குத் தப்பியோடினவர்களாரவாரத்துடன் அகப்பட்டவர்களையும எடுத்துக் காவிக்கொண்டு மறுகிராமத்துக்கோடிப்போனுர்கள். இந்த வேளையிலே சில மூடாத்துமாக்கள் வேளை இதுதானென்றெண்ணிச் சோரம்பண்ணுகிறதற்குன்னி அநேக உடைமைகளைக் கன்னமிட்டு மறுதிசைகளுக்கோடிப்போனுர்கள்.

இப்படிச் சம்பவித்த பூமியதிர்த்தலைப் பற்றி ஒருவர் சொல்லுகிறதாவது, (அநு)பேரளவுக்கு நாசமாய்ப்போனுர்கள். தகர்ந்து கீழே விழாத ஒரு வீடாகுதலில்லை. சாவாமல்த் தப்பிப் பிழைத்தவர்களிற் பாடான காயம வாங்காதவர்கள் ஒருவருமில்லை. வீசின காற்றுஞ் சடலத்துக்கு மெத்த யோக்கியமானதுமல்ல.

[From the Colombo Observer.]

My Dear Mr. Editor.

I send you the enclosed for publication. I received it from an esteemed friend, who had frequent opportunities of testing the efficacy of the dose during the prevalence of Cholera in the Northern Province in 1837, and who never found it to fail but in one instance; and in that case there was every reason to believe that its effects were neutralized by non-adherence to the rule of abstaining from any liquid impregnated with lime, as all the water *here* is.

The gentleman referred to received the prescription from a Medical officer in the East India Company's service, who had used it with the greatest possible success at Madura and other places on the Continent.

You will perceive that the old remedies, Calomel, Opium, and Camphor are not discarded; neither is the exercise of common sense (*puti* as the Tamils have it,) dispensed with, nor the remedy itself called a *specific*. But so powerful are the effects of the new ingredient (new at least to me,) deemed that, unless opposed by the presence of lime, restoration to health and strength may with a great degree of confidence be expected, through the instrumentality of one of the most powerful of poisons—Sugar of Lead.

In the common course of events, while Cholera is constantly travelling over the opposite Continent, we may expect it occasionally to visit our shores; and it would be well to be prepared for such contingences, and to have it in our power to alleviate human suffering, and, under divine providence, be the happy means of preserving human life.

Northern Province, } Yours faithfully,
August 8. 1842. } IOTA.

Dose for Cholera—To be taken as early as possible in the disease or in the course of the Premonitory Diarrhæa.

From 12 to 20 Grains Calomel. (say 18 as a full dose for a European Adult)
From 3 to 6 Grains Sugar of lead—(say 4 as an average dose,)
From $1\frac{1}{2}$ to 2 Grains of Opium,
From 2 to 3 Grains of Camphor.

The quantity to vary with the urgency of the case. If it merely appears as a suspicious Diarrhæa, one half of the smallest quantity above given will often be enough.

NOTE.

1 That no water, or Conjee, or any thing else containing *lime* (as all the water in this island probably does) must be taken. Such water will decompose the sugar of Lead. I have always given the above dose merely in powder.

2 If when the symptoms are checked there is an appearance of fever, it should be abated by bleeding if possible, or else by Cathartics, of which the best for the purpose is 10 Grains Jalap, or 20 Cream of Tartar, (more or less as the case may need.) If these cannot be had use castor oil.

If giving the dose once is not found sufficient to check the vomiting, purging, &c. let it be repeated until the desired effects follow. Judgment must be used to accommodate the dose to the virulence or obstinacy of the disease. The largest quantities named constitute a full dose for a European adult in a violent case. Sometimes 2 or 3 such doses must be given. Generally one, if given as soon as any serious symptoms appear, will be enough.

It is of about as much importance to have the body kept warm, especially the legs, as to take medicine. If cramp comes on Mustard Plaster or bottles of hot water applied externally will be of great use.

5 If the Cholera has actually made its appearance in a place, every Diarrhæa should be promptly checked, and even if it is not prevailing, all violent Diarrhæa should be arrested. Never wait for the full development of the sickness. In lighter cases simple laudanum and peppermint 10 to 30 drops of each may be taken. If this, in an apparently light case, is not enough, part or all of the before mentioned dose to be taken. Common sense to adopt quantity to urgency of case.

SUMMARY OF NEWS.

JAFFNA.

The Rev. Messrs. Crowther and Percival lately returned from a Missionary visit to Batticaloe, the Veddah Country, Kandy, and Colombo. Mr. Crowther immediately afterwards embarked for the Continent.

The Reverend J. Kats, late assistant Wesleyan missionary has joined the Church of England, and has been appointed, as a temporary arrangement, Catechist at Trincomalie under the Rev. S. Owen Glenie, *Colonial Chaplain* at that station.

Lieut. Kerstman has succeeded Captain Driberg as Staff Officer in the Garrison here.

We regret to hear that the District Judge of the Islands, Mr. Mootiah, is so seriously indisposed that he has been under the necessity of applying to Government for three months leave of absence, to proceed to Colombo for the benefit of his health.

The following are among the estimated expenditures of Government for 1843.

£500 for raising and forming a road along the beach at Jaffna from the south-west corner of the esplanade to the ferry in the North esplanade.

£1,000 for the road from Colombo to Jaffna.

£250 for the repairs of roads.

£1,000 for the new road from Jaffna to Batticotta.

MADURA.

Madura October, 7th 1842.

Died, at his residence on the morning of this day John Steele, Esq. M. D. *Physician* of the Madura (American) Mission.—Dr. Steele arrived in India early in 1837 and has passed his time in Dindigal and Madura—The Readers of the "Star" are generally acquainted with the fac that Dr. Steele has long been wasting away with consumption. "His end was peace."—He was buried this evening and his funeral was attended by all the English Residents and a *large* concourse of Natives. "Be ye also ready—Work while it is day for the night cometh," are admonitions addressed to us by this and many similar providences with which the Lord is visiting his servants in foreign lands.

It may not be amiss to add to this notice that intelligence has just reached us of the death of the Rev. Geo. Champion, formerly connected with the East African Mission of the American Board.—Consumption was the messenger that called him away, and judging from the expressed feeling and uniform deportment of Mr. Champion, it cannot be doubted that peace if not triumph characterized his departure.—*Communicated.*

CHINA.

The Steamer Sesostris from (China) Nanking arrived at Galle yesterday in 32 days.

The news she brings is that a Treaty of Peace was signed on the 29th. August.

The Chinese are to pay 21,000,000 of Dollars £4,200,000—Hongkong to remain the property of the British, and Chusan and Amoy to be kept by the British until the indemnity be paid within 3 years, and the first 6,000,000 to be paid immediately.

A British Envoy is to reside at Pekin—six ports to be thrown open to British trade.—*Colombo Observer Extraordinary.*

THE EARTHQUAKE AT ST. DOMINGO.

EXTRACTS FROM PRIVATE LETTERS.

"The earthquake consisted of a quick succession of lateral or horizontal movements. The houses commenced falling on the instant; a thick cloud of dust arose, accompanied by a quick rolling or heavy motion, with an unbroken fierce roar and suffocating heat. It was indeed an awful moment. The Bord de la Mer-street runs nearly north and south, and fissures are still visible in its entire length—nearly three quarters of a mile.

"About five minutes after the great shock the sea rose from five to six feet, and rushed to the shore, retired and rose again, and so on four or five times. It was knee-deep on the Bord de la Mer-street. The vessels in the harbour felt the effects severely. The Captains expected to see their masts every moment fall over the sides * * * Fires broke out immediately after the convulsion, and raged for 10 days, adding to the distress and horror of the survivors; and numbers of the poor creatures buried alive under the ruins, met a shockingly painful death. Many who were seen badly wounded and incapable of moving, on the evening of the catastrophe were burnt during the night, a few bones merely remaining next morning.

"The survivors fled for refuge to the Tossette, carrying with them such of the wounded, and the dying as could be extricated from the ruins. What a night of horror, doubt and dread! The mingled cries of the wounded and of the children—the wailings and shrieks of the women—the subterranean thundering, the almost uninterrupted quaking of the earth; produced an effect which no pen can describe, nor imagination conceive. Many households have been altogether destroyed. From 10 to 50 country people were killed in and around the houses of each of the coffee buyers. * *

On the very night of the earthquake the *canaille* of the town began thieving on a small scale, but it was on the third day that the sack and plunder commenced *en grande.* On that day the country people flocked in, and for eight or ten successive days it was one continued scene of open undisguised, sword in hand pillage. Every man was armed, and bloody fights were of common occurrence over the division of the spoil, or when a stronger party attempted to wrest the booty from a weaker.

"A commission has been appointed to investigate and punish; but how can penal measures be taken against an entire people? With the exception of the wounded, I do not believe that 40 persons, males, could be found in the Cape who would not participate in the plunder. * * *

The last estimate is from 7000 to 8000 souls; two-thirds of the popula-

tion of the Cape have been destroyed—not a house is left standing—those persons that have escaped are in general badly wounded. The air they say is pestilential, and to complete the scene of misery. thousands of the savages from the plains and mountains are now pillaging the ruins, in organised and armed bodies, plundering the unfortunate survivors, and murdering the wounded they find among the ruins. At Port de Paix they had buried, by the last accounts, 110 bodies. Mountains have been rent in two, and even at Morne á Sélle the shock was severe.

"Mr. M.—— appears still wild with the fright he sustained. He says the town was thrown down in 30 seconds. The family of Mr. Bird, the Protestant minister, were at the time in their belvedier (or observatory;) the house and belvedier all came down together, and not one of them was hurt; several other escapes were miraculous. Mr. Baden was in his salon upstairs, and suddenly found himself in the street, amidst the ruins of his own house.

"The Cape in fact no longer exists. Mr.—— states, that the people at the Cape appeared stupified and wild at the extent of the calamity."

IMPORTANT RULES

For all who write for News-papers.

Write legibly. Make as few erasures and interlineations as possible. In writing names of *persons* and *places*, be more particular than usual to make every letter distinct and clear—also in using words not English. Write only on one side of the paper, when not sent by mail. Employ no abbreviations whatever, but write out every word in full. Finally when you sit down to write, do not be in a hurry.—Consider that hurried writing makes slow printing. —*American Paper.*

அறிவித்தல்.

உதயதாரகைக் கையொப்பக்காரருக்கு நேசத்துடன் நினைப்பூட்டுகிறதென்னவானால் இந்தவருடமுடிவுகிட்டிவிட்டதினாற் பணங்கொடுப்பவர்கள் தங்கள் பணத்தைப் பிரசித்தகாரனுக்கு அல்லது காரியகாரருக்குத்தயவுபண்ணிக்கொடுத்தனுப்ப வேண்டியது.

We take the liberty to remind our Subscribers, that the year is fast drawing to a close. They will confer a favour by early remitting to the Publisher or the Agents of the "*Star*" amounts that may still be due.

ADVERTISEMENT.

By Mr. JOHN SPELDEWINDE, *Licensed Auctioneer*

To be sold without reserve.

On the 29th instant (Saturday) at 2 o' clock in the afternoon, in the spot *Welene*, the following landed property belonging to Mariana Rodrigo, widow of PHILIP RODRIGO MOOTOKISHNA *Mudel.*

Situated at Welene East.—Registered in the thombo in Copale Chettiar's, &c. name called Codalywayel — do Sandy Moony Kolottoko Meetko Welladay, do—Poodo Kolottakoo Keleko Welladay—do—Nawellady—do—Pallea Ayrapullom, do Coody Eropo do—Canna Ode—do Cottiawatta, —do Tawady—the above pieces consists of Paddy and Warego culture 698 3-8 Lachams and the paddy 646 Lachams the Warego 52 3-8 Lachams. One Bungalow belonging to this field—and palmyra, cocoanut trees and other plantations—do—other lands called Corawandocoody and other parcels 220 5-8 Lachams Warego culture, with Palmyra and young Palmyra trees—do—Narankay Moonawelly in extent 100 Lachams.

Jaffna, 13th October 1842.

விற்பனவு.

மனம்பொருந்தி விற்பனவுபண்ணுகிற மெஸ்தர் யோன் இஸ்பெலுதுவெந்தை அவர்களால் இந்த ஸ்ரீ உகூந் திகதி, சனிக்கிழமை பின்னேரம் இரண்டுமணியளவில் வண்ணார்பண்ணைசெட்டி பிலீப்புறோதிறீகு முத்துக்கிட்டிண முதலியார் கைம்பெண் மரிய ஆறுப்பிள்ளை உடைய இதின்பின்னூற் கண்டிருக்கிற காணி— வேலணைகிழக்கூரிறைகட்டுக்குச்சேர்ந்தது காணியிலிருந்துதான் விற்பனவு நடத்தப்படும். வண்ணார்பண்ணைசெட்டி கோபாலசெட்டியார் முத்தயஞ்செட்டியார்பேரிலும் மறுபேர்கள்பேரிலும்தோம்பு, கோடாலிவயல்,— கோடாலிவயல்,சந்தமூனையில் குளத்துக்கு மேற்குவெள்ளிடையும், புதுக்குளத்துக்கு கிழக்குவெள்ளிடையும், நாவலடிப் புலத்துக்கு வடக்கு வயலும், பள்ளன் உயரப்புலமும்குடியிருப்பும், கண்ணோடை, கொத்தியாவத்தையும்-தாவாடி இந்தப்பிரிவுகள் அடங்கலும் நெல்லும்நிலையும் பரப்பு, கூாகூஅவஹா. ஆனாலும் நெல்லுக்குப் பரப்பு, கூாசகூ. நிலப்பரப்பு, ருஉவஹா. இந்தவயலுடன் சேர்ந்த வங்களாவும் பனையும் வளர்வடலியும் கிணறுகளும் தென்னம்பிள்ளைகளும் மற்றுஞ் செய்பயிர்களும், வெந்தீசுவின்கொந்தீசு அந்தக்காணியிடமாக நடத்தப்படுகிறபடியால் அந்த இடமாகப்பிரசித்தப்பண்ணப்படும்.

இத்துடன் கூடச்சேர்ந்த காணிகள் அன்னதானமுதலியார் சுப்புறுமணியன் பெண் அய்யாத்தையும், அய்யம்பெருமாளும், மறுபங்காளர்பேரிலும, சிதம்பரன் பெண்பெரியதங்கச்சியும்பேரில் தோம்பு,கோரைவாண்டக்குழியும் மறுபிறிவுகளும் நிலப்பரப்பு உாஉ௰இவஹா.பனையும் வடலியும்—பறுபத அய்யன் முருகன்பேரில் தோம்பு நாங்கைமூனைவெளி நிலப்பரப்பு, ௱.

CONTENTS.—அட்டவணை.

	page.		
Historical sketch of the Pandian Kingdom - -	241	பாண்டிவள நாட்டுச் சரித்திரம்	241
Life of Mohamed - -	ib.	மகமதுவின் சரித்திரம்	ib.
Abridgement of Good's Book of Nature - - -	242	கூட்டென்பவர் செய்த பிரபஞ்ச நூல்	242
Communications -	243-247	கடிதங்கள்	243-246
Pancha-Tantra-Ketei -	ib.	பஞ்சதந்திரக் கதை	247
Cural - - -	248	குறள்	248
Communications -	249-250	கடிதங்கள்	249
Summary of News -	251	புதினச் சங்கதிகள்	250

Printed and Published at the American Mission Press, Jaffna, by Eastman Strong Minor.